சுதந்திரன்
SUTANTIRAN

விலை: சதம் 60. தொலைபேசி: 23411 நிறுவியது: 1947

வள்ளுவர் ஆண்டு 2006 ஐப்பசி 2, ஷவ்வால் 13 (19-10-75) ஞாயிறு புத்தகம் 27 தாள் 12

## ஐந்து இளைஞர்கள் பிரச்சினை தனியே எடுக்கப்படுமா?

துரையப்பா கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து அறுபதுக்கு மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கின்றனர் அல்லவா? இவர்கள் கைதுசெய்யப்பட்டு இரண்டரை மாதங்கள் ஆகின்றன.

ஆனால் ஐந்து தமிழ் இளைஞர்கள், முறையே 1972, 1973, 1974ம் ஆண்டுகளில் கைது செய்யப்பட்டு இதுவரை விசாரணையோ விடுதலையோ இன்றி தொடர்ந்து சிறை வைக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த ஐந்து இளைஞர்களின் பிரச்சினை தனியே எடுக்கப்படுமா? தமிழர் கூட்டணி பா. உ. க்கள் இந்த ஐவரின் பிரச்சினையை தனியே எடுத்து தேசியபேரவையில் கேள்விக்கணை எழுப்புவார்களா?

தொடர்ந்து ஆண்டுக்கணக்காக சிறைவைக்கப்பட்டிருக்கும் ஐந்து தமிழ் இளைஞர்கள் விபரம் வருமாறு:-

- என். அமரசிங்கம்—கைதான திகதி 12-7-72.
- ஞா. ஞானசேகரம்—கைதான திகதி 15-1-73
- பொ. சத்தியசீலன்—கைதான திகதி 20-2-73
- பொ. திசைவீரசிங்கம்—கைதான திகதி 16-3-73
- பூ. நடேசானந்தம்—கைதான திகதி யூலை—1974

படியுங்கள்
சுடர்
ஈழத்தின் ஈடிணையற்ற கலை இலக்கிய மாசிகை

## தமிழ் மாணவர்கள் கொதித்தெழுகின்றனர்

# தரப்படுத்தலை எதிர்த்து தீவிரப்போராட்டம்!

தகுதியும் திறமையுமுள்ள தமிழ் மாணவர்களின் உயர்கல்வியை திட்டமிட்டு வேரறுத்துவரும் ஆட்சியாளரின் 'தரப்படுத்தல்' முறைக்கெதிராக தமிழ் மாணவர்கள், இளைஞர்கள் தீவிரமான போராட்டம் ஒன்றை வெகுவிரைவில் ஆரம்பிப்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. பாரபட்சம் காட்டும் மொழிவாரித்தரப்படுத்தல் முறையைக் கைவிட வேண்டுமென்ற கெனமன் குழுவின் ஆலோசனையை அரசு நிராகரித்துவிட்டதுடன், தொடர்ந்தும் மொழிவாரித் தரப்படுத்தலை நடைமுறைப்படுத்துவது என்ற முடிவெடுத்ததையடுத்து தமிழ் மாணவர்கள் கொதிப்பும் அதிருப்தியும் அடைந்துள்ளனர்.

மொழிவாரித் தரப்படுத்தலை கைவிட வேண்டும் என்று கெனமன் சமர்ப்பித்த நீதியான பரிந்துரையை கெனமனையும் உள்ளடக்கிய அரசாங்கம் நிராகரித்துவிட்டது கண்டு தமிழ் இளைஞர்கள் மத்தியில் பெரும் புயல் வீச ஆரம்பித்துள்ளது. மொழி வாரித் தரப்படுத்தல் மட்டும் போதாது — சன விகிதாசாரத்தின் அடிப்படையும் பல்கலைக்கழக அனுமதியில் பின்பற்றப்பட வேண்டும் என்று 'சிங்கள தாருணகல் விதாயை' போன்ற சிங்கள இயக்கங்கள் வற்புறுத்தி வருவது கண்டு தமிழ் மாணவர்கள் கொதிப்படைந்துள்ளனர்.

—7-ம் பக்கம் பார்க்க



## அண்ணா விழாவில் அமிர் பேசுகிறார்!

கலைஞர் கருணாநிதி பொதுப்பணி மன்றம் 18-10-75 சனிக்கிழமை மாலை 6 மணிக்கு பம்பலப்பிட்டி சரசுவதி மண்டபத்தில் எடுக்கும் பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் பெருவிழாவில் தமிழர் கூட்டணிச் செயலாளர்நாயகம் நாவலர் அமிர்தலிங்கம் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகிறார். இவ்விழாவுக்கு மேற்படி மன்றத்தலைவர் திரு. க. நவசோதி தலைமை தாங்குகிறார். இரா. சிவலிங்கம் உட்பட வேறு பலரும் இக்கூட்டத்தில் உரையாற்றுவர்.

## ● கத்தோலிக்க சமயப் போர்வையில்

## மடுத்திருப்பதியில் சிங்களக் காடையர்


# அட்டகாசம்!

14ம் திகதி மாலை 9 மணியளவில் ஆராதனைகள் முடிவடைந்ததும், சில சிங்களக் கத்தோலிக்க காடையர்கள் பரிபாலன குருவிடம் சென்று ஏன் மருதமடு அன்னையின் திருச்சிலையினால், ஆசீர்வாதம் அருளவில்லை என்று வினவி அவரை அவதூறான வார்த்தைகளினால் திட்டினார்களாம், பின் மேல் வீட்டுக்குச் சென்று யாழ் ஆயரை இழுத்துத் தள்ளிவிட்டு ஓர் ஐரோப்பிய குரவர் மீதும் அங்கிருந்த மற்றைய இரு தமிழ் குரவர் மீதும் காடைத்தனம் புரிந்

—4-ம் பக்கம் பார்க்க

### தமிழ்க் குருமார் அவமதிக்கப்பட்டனர்!

மன்னார் மாவட்டத்திலுள்ள மருதமடுத்திருப்பதியில் அண்மையில் சிங்களக் கத்தோலிக்கக் காடையர்கள் மொரட்டுவையிலிருந்து சென்று அட்டகாசம் புரிந்து குழப்பம் விளைவித்ததுடன், தமிழ்க் குருமாரை அவமதிக்கும் விதத்தில் வெறித்தனமாக நடந்துகொண்டதாகவும் தமிழ் கத்தோலிக்க வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது. இச்சம்பவங்கள் குறித்து தமிழ்க் கத்தோலிக்கர்கள் ஆத்திரமும் அதிருப்தியும் அடைந்துள்ளனர்.



கருணாநிதி தரும் கற்கண்டுக் கவிதை (உள்ளே)

இச்சம்பவம் பற்றித் தமிழ் கத்தோலிக்க வட்டாரங்களில் கூறப்படுவதாவது:

மன்னார் மாவட்டத்தில் நிலவிய கடும் வரட்சி காரணமாக மடுக் குளத்தில் தண்ணீர் முற்றாக வற்றிப் போனதால் யாத்திரீகர்களின் வசதியை முன்னிட்டு மடுத்திருப்பதியில் வழமையாக ஆவணி மாதத்தில் நடைபெற்று வந்த திருவிழாவை இவ்வாண்டில் இரத்துச் செய்வதெனச் செய்தி ஏடுகளின் மூலம் விளம்பரம் செய்யப்பட்டது எவரும் அறிந்ததே.

எனினும் வசதியீனங்களைப் பொருட்படுத்தாது வழமைபோல சில ஆயிரக்கணக்கான யாத்திரீகர்கள் அங்கு சென்றிருந்தனர். யாத்திரீகர்கள் என்ற போர்வையில் மொறட்டுவைப் பகுதியைச்சேர்ந்த சிங்கள கத்தோலிக்கக் காடையர்கள் சிலரும், கலகம் விளைவிக்கும்நோக்குடன் திட்டமிட்டு மடுவுக்குச் சென்றிருந்தனர் என்று கூறப்படுகிறது. சிங்கள மதகுருக்கள் சிலரும் யாத்திரீகர்களோடு சென்றிருந்தனராம்.

மடுத்திருப்பதியில் கூடிய யாத்திரீகர்களுக்கு வசதியளிக்கும் நோக்கமாக பரிபாலன குரவர் ஒலிபெருக்கிகளைப் பூட்டி ஆராதனைகளை நடாத்தினர். யாழ். ஆயர் பேரருட்திரு வ. தியோகுப்பிள்ளை ஆண்டகையும், யாழ் மறைமாவட்ட விருந்தினராயிருந்த தமிழ் நாடு கோட்டாறு ஆயர் பேரருட திரு ஆரோக்கியசாமி ஆண்டகையும் அங்கு வருகை தந்திருந்தனர்.

## தமிழர் கூட்டணி தலைவர்கள் பேசுகிறார்கள்!

தமிழர் கூட்டணித் தலைவர் மூதறிஞர் செல்வா, செயலாளர்நாயகம் நாவலர் அமிர்தலிங்கம், துணைத் தலைவர் மு. சிவசிதம்பரம், எம். எஸ். செல்லச்சாமி, வி. என். நவரத்தினம் ஆகியோர் பம்பலப்பிட்டி சரசுவதி மண்டபத்தில் 17-10-75 வெள்ளிமாலை நடைபெறும் கூட்டத்தில் உரை நிகழ்த்துகின்றனர். மறைந்த தியாகி அமரர் இராசரத்தினம் அவர்களுக்கு அஞ்சலிதெரிவித்து அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் இந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்திருக்கிறது. கூட்டத்துக்கு அ. எ. வி. சங்கத்தலைவர் திரு. சோதிலிங்கம்தலைமைதாங்குரா. இக் கூட்டத்தில் திருவாளர்கள் கோவை மகேசன், ஆ. பரஞ்சோதி, ஈழவேந்தன், ஐ. தி. சம்பந்தன், ஆ. ரகுபதிபால சிறீதரன் ஆகியோரும் பேசுகின்றனர்.

இச்கூட்டத்தில் அமரர் இராசரத்தினம் எழுதிய 'இலங்கைத் தமிழர் இன்னல் தீருமா?' எனும் நூலும் வெளியிடப்படுகிறது. சுதந்திரன் வெளியீட்டகம் இந்நூலை வெளியிட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக்

# வன்னியசிங்கம் வாழ்க்கையில்..!

சுதந்திரன் நடாத்தும் அமரர் வன்னிய சிங்கம் நினைவுக் கட்டுரைப் போட்டி முடிவு திகதி 31-10-75 ஆகும். போட்டிக்கு கட்டுரைகள் எழுதுவோர்க்கு உதவியாக தலைவர் வன்னியனாரின் வாழ்க்கை வரலாற்றை கேள்வி—பதில் உருவத்தில் இங்கு தருகிறார் வித்துவான் வ. கந்தையா அவர்கள்.

வினா: தமிழ்பேசும் மக்கள் எவ்வித அரசியல் சூழ் நிலையில் இருக்கும் போது வன்னியசிங்கம் அரசியலிற் பிரவேசித்தார்?


விடை: தமிழ்பேசும் மக்களின் அன்றைய அரசியற் சூழ் நிலையைச் சிறு உதாரண மூலம் விளக்கலாம்; பாழ்ங் கிணறு; பற்றையும் புதரும் நாற் புறமும் மண்டிக்கிடந்தது; கிணற்றின் அடியில் கொடிய சர்ப்பங்கள் நெளிகின்றன; கிணற்றின் மேலாக ஒரு மரக்கிளை. அம்மரக்கிளையிலுள்ள தேனை எடுக்க ஏறியவன் தவறி கிணற்றின் இடிகரையில் விழுந்து கிணற்றினுள்ளே விழப்போகுஞ் சமயம் உட்பக்கச் சுவரிலிருந்த மரவேரை இறுகப் பிடித்து அந்தரத்தில் தொங்கினான். அவன் பிடித்திருந்த மரவேரை எலி அறுத்துக் கொண்டிருக்கிறது. முயன்று மேலேற வேண்டியவன் உடைந்த தேன் கூட்டிலிருந்து சொட்டுச்சொட்டாக விழுந் தேனைத் தன் நாவால் ஏந்தி ருசித்து ஆனந்தப்படும் நிலை எப்படியோ அந்நிலையில் இலங்கை வாழ் தமிழ்பேசுமினம் இருந்த 1947ம் ஆண்டில் கோப்பாய்த்தொகுதி வேட்பாளராகத் தேர்தலிற்போட்டியிட்டு அமோக வெற்றியுடன் அரசியலுட் பிரவேசித்தார்.

வினா: கட்சி சார்பில் போட்டியிட்டாரா? சுயேச்சை [illegible]ாதியாகவா?

விடை: 1947ல் தம்பியப்பா கோப்பாய்த்தொகுதிக்குத் தமிழ்க் காங்கிரஸ் வேட்பாளராகித் தேர்தலுக்கு முன் மாரடைப்பினால் மரணமாக, அந்த இடத்தைத் தமிழ்க் காங்கிரஸ் திரு. வன்னியசிங்கம் அவர்களால் நிறைவுசெய்தது.

வினா: அமரர் தாமாகவே காங்கிரசில் இடம் பிடித்தாரா?

விடை: திரு. பொன்னம்பலம் அவர்கள் வன்னியனாரிடஞ் சென்று வேட்பாளராக வேண்டும் என வற்புறுத்தினார். வன்னியனாரோ "அ[illegible]யல் என்பது முழுநேர[illegible]ழியம்; பொருளாதார[illegible] நிலைமையோ படுமோசம்; இந்நிலையில் தம்மை மன்னித்துவிடுமாறு கூறினார். நிலைமை நெருக்கடியடைய திரு. செல்வநாயகம் அவர்களின் வற்புறுத்தலை மறுக்கமுடியாது வேட்பாளர் நியமனத்தை ஏற்றார்.



வினா: வன்னியசிங்கம் அவர்களது பூர்வீக வரலாற்றைச் சுருக்கிக் கூறுக.

விடை: தமிழ் வேந்தரின் ஆயுத உலைக்களமைந்த கொல்லன் கலட்டியில் வீரம் அறிவு கொடை எழுச்சி முதலிய அருங்குணங்களமைந்த மறக்குடி மக்கள் பரம்பரையில் வந்த குமாரசாமி என்பவர் இந்திய பல்கலைக் கழகச் சிறப்புக் கலைமானி; சங்க இலக்கிய வச்சிர கூடாரம்; உயர்நீதிமன்ற வழக்குரைஞர்; ஊராளுமன்றத் தலைவர்; மாவைக் கந்தனின் அணுக்கத்தொண்டர்; சிவநெறித்திருவினர்; தாளாண்மை மிகுவேளாண் பெருநில மரபினர். இத்தகு சிறப்புகள் பலவுமொருங்கமைந்த

வித்துவான்

**வ. கந்தையா**

வரைத் தந்தையாராக்கி 1911ம் ஆண்டு ஐப்பசித் திங்கள் பதின் மூன்றும் நாளில் வன்னியசிங்கம் அவர்கள் பிறந்தார். இரு சகோதரிகளையும் ஒரு சகோதரனையும் உடன் பிறப்பாளராக்கினார்.

வினா: வன்னியனாரின் தகைமைகளெவை?

விடை: பரீட்சை எடாத பண்டிதர்; அகத்தாற்பொய்யாத சைவன்; லண்டன் பல்கலைக்கழகக் கலைமாணி; இலங்கைச் சட்டக் கல்லூரியின் அறவாதி; எளிய வாழ்வு; உயர்ந்த சிந்தனை; கூர்ந்த மதி; அபார ஞாபகம்; தீர்க்க தரிசனம்; சீரிய திட்டம்; செயற்திறன்; கவர்ச்சி மொழிப்பிரயோகம்; அயரா உழைப்பு; காந்தீய தத்துவங்களில் திடமான நம்பிக்கை; வாதத் திறமை ஆதியாம் அருங்குணங்களோடு, ஒரு சிலரைத் தவிர, அரசியல் வாதிகளின் ஜென்மசத்துருக்களாய நேர்மை, நிதானம், ஒழுக்கம் பண்பு, அன்பு, அமைதி, வீரம் துணிவு முதலியன ஒன்று திரண்ட உருவமே வன்னியசிங்கம். 1943 பங்குனித் திங்களில் வைத்திய கலாநிதி சிறீநிவாசன் மகள் கோமதியைத் திருமணஞ்செய்தார்.

வினா: தமிழரசுக் கட்சி தோன்றியது வன்னியசிங்கம் அவர்களது விடுதலை வேட்கையாலா?

விடை: விடுதலை வேட்கை மட்டுமல்ல; எதிர்கால அரசியல் ஞான சாணக்கியமும்

—5-ம் பக்கம் பார்க்க

---

# இயக்கச் செய்திகள்

அண்மையில் தம்பிலுவில், திருக்கோயில், மட்டக்களப்பு ஆகிய இடங்களில் தமிழர் கூட்டணியினதும், தமிழ் இளைஞர் பேரவையினதும் கருத்தரங்குகளும், கலந்துரையாடல்களும் நடைபெற்றன. இக் கருத்தரங்குகளிலும், கலந்துரையாடல்களிலும் தமிழர் கூட்டணித் தலைவர்கள் திரு. கதிரவேற்பிள்ளை பா. உ., திரு. வி. தர்மலிங்கம் பா. உ. ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றியும், கேள்விகளுக்குப் பதிலுரைத்தும் கருத்தரங்குகளையும், கலந்துரையாடல்களையும்வெற்றி பெறச் செய்தனர் — இக் கருத் தரங்குகளை கொழும்புத் தமிழ் இளைஞர்பேரவை தம்பிலுவில் தமிழ் இளைஞர் பேரவை, மட்டக்களப்பு தமிழ் இளைஞர் பேரவை ஆகியோர் ஒருங்கிணைந்து நடாத்தினர் — இக்கருத்தரங்குகளிலும், கலந்துரையாடல்களிலும் கொழும்புத் தமிழ் இளைஞர் பேரவை சார்பில் கிளைத்தலைவர் ஆ. இரகுபதி பாலஸ்ரீதரனும் கலந்துகொண்டார்—

தமிழர் கூட்டணித் தலைவர்களும், த. இ. பேரவை உறுப்பினர்களும் சிறையிலிருக்கும் கவிஞர் காசி ஆனந்தன் இல்லத்திற்கும், இளைஞர் நடேசானந்தனின் இல்லத்திற்கும், அமரர்கள் அரியநாயகம், இராசமாணிக்கம் முன்னாள் பா. உ. இல்லங்களுக்கும் வருகை தந்து அளவளாவிச்சென்றனர்.

———

## சிரமதானம்!

தமிழ் இளைஞர் பேரவையின் கொழும்புக்கிளை தொடர்ந்து செய்துவரும் சிரமதானப் பணியில் இரண்டாவது அங்கமாக ரொரிங்கனிலுள்ள அர்ச். திரேசா தேவாலயத்துடன் அமைந்திருக்கும் அர்ச். மார்டின் அநாதைகள் பராமரிப்பு நிலையத்தின் சுற்றுடல்களை அண்மையில் சுத்தம் செய்து சிரமதானப் பணியிலீடுபட்டனர் — ஏறத்தாழ இருபத்தைந்து வாலிபர்கள் கலந்து கொண்ட இச்சிரமதானப் பணி அதிகாலை தொடக்கம் பகல் இரண்டு மணிவரை நடைபெற்றது- இப்பணிக்கு தேவாலயத்தைச் சேர்ந்த திரு. அமலன் சண்முகநாதனும், திரு. யேசுநாதனும் பெருமுதவி புரிந்தனர். சிறு கலந்துரையாடலுடன் சிரமதானப்பணி இனிதே முடிவுற்றது.

## நிதி சேகரிப்பில் விஸ்வமடுவும், முன்னணியில்!

சிறையில் உள்ள தமிழ் இளைஞர்களுக்காக தமிழர் கூட்டணி மேற்கொண்ட நிதிச்சேகரிப்பில் விஸ்வமடு கூட்டணிக்கிளையும் உற்சாகத்துடன் கலந்துகொண்டது. கூடுதலாக நிதி சேகரித்த தொகுதியான வவுனியாவில் அதிகம் நிதிசேகரித்த ஒரு கிராமம் என்ற பெருமையை விஸ்வமடு பெற்றுக்கொண்டது. இளைஞர்பேரவைக் கிளைத் தலைவர் இரா. கார்த்திகேசு, கூட்டணிக் கிளைச்செயலாளர் ப. வை. ஜெயபாலன் ஆகிய உப அமைப்பாளர்கள் தலைமையில் திருவாளர்கள் இரங்கநாதன், அ. மகேந்திரன், மு. பன்னீர் செல்வன், சொ. யோகநாதன், சி. லட்சுமிகாந்தன், கு. செல்வேந்திரன், சு. சிறீதரன், இ. நம்பியாரூரன், கா. கந்தசாமி, ம. ஆ. விநாயகமூர்த்தி, ஆ. செல்வரத்தினம், யூஜின் சாள்ஸ் ஆகியோர் இங்கு நிதி சேகரிப்பில் ஈடுபட்டனர். இவர்கள் தம் நிதித்தொகையை வவுனியா பா. உ. மூலமாக நிதிப்பொறுப்பாளருக்கு வங்கி ஓலையாக அனுப்பி வைத்தனர்.

———

## தர்மபுரம் தொண்டர் மறைவு

தர்மபுரம் தமிழர் கூட்டணிக் கிளையின் முக்கிய பிரமுகரான திரு. க. சோமசுந்தரம் கடந்தவாரம் இயற்கை எய்தினார். சகல சட்ட மறுப்பு போராட்டங்களிலும் இயக்கத்தின் ஏனைய நடவடிக்கைகளிலும் முன்னின்று உழைக்கும் இவரது மரணம் வருத்தத்திற்கு உரியதென்று இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்ட கிளிநொச்சி பா. உ. திரு. வீ. ஆனந்தசங்கரி கருத்துத் தெரிவித்தார். இவர் தீவிரமாக இயங்குவதைத் தடை செய்வதற்காக அண்மையில் கிளிநொச்சி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிச் செயலாளர் 72வயதான இவர் தனக்கு கொலைப் பயமுறுத்தல் செய்ததாக இவர் மீது வழக்கு தொடர்ந்திருந்தது குறிப்பிடத்தககது.

———

## அம்பாறை மாவட்டத்தில் நிதி சேகரிப்பு

அம்பாறை மாவட்டத் தமிழ் இளைஞர் பேரவையினரும் தமிழர் கூட்டணியினரும் அம்பாறை மாவட்டம் முழுவதும் அக்டோபர் 2 முதல் 5 வரை வீடுவீடாகச் சென்று நிதி திரட்டினர். சிறையிருக்கும் தமிழ் இளைஞர் குடும்பங்களுக்காக இந் நிதி திரட்டப்பட்டது.

அக்கரைப்பற்றில் தமிழர் கூட்டணிப் பிரமுகர் திரு. சிவஞானச்செல்வம் (குருக்கள்), தமிழ்இளைஞர்பேரவை உறுப்பினர்கள் திரு. லிங்கசாமி, கண்ணன் ஆகியோர் தலைமையிலும், தம்பட்டையில் திரு. கு. குருநாதபிள்ளை. கு. ஆறுமுகம் ஆகியோர் தலைமையிலும், தம்பிலுவில். திருக்கோவில் பகுதியில் திரு. க. சிந்தாத்துரை, திரு. அரசரத்தினம், திரு. தருமரட்ணம், பொன். கோபாலன், ஆகியோர் தலைமையிலும் நிதிசேகரிப்பு வேலைகள் நடைபெற்றன. எங்கும் ஆர்வத்துடன் மக்கள் ஆதரவளித்தனர்.

———

## ஒரு சுவையான நிகழ்ச்சி!

சென்றவாரம் 2ம் திகதி கிளிநொச்சி பா. உ. திரு. வீ. ஆனந்தசங்கரி மற்றும் கூட்டணித் தொண்டர்கள்-கிளிநொச்சி பட்டண வீதி—பஜார் கடைகளில் நிதி திரட்டிவந்தார்கள்.

சென்றமாதம் 26ம் திகதி அமரர் பண்டாரநாயக்கா ஞாபகார்த்ததின விழா கிளிநொச்சியில் [illegible] போது அதற்கு தலைமைதாங்கிய முந்நாள் பட்டணசபை உறுப்பினரும் பிரபல வர்த்தகருமான திரு. எஸ். சித்தி பொன்னம்பலம் அவர்களின் கடைக்கு எம். பி. சென்று உண்டியலை நீட்டினார்.

பொன்னம்பலம், எம். பி.க்கு கைகொடுத்து உணர்ச்சி பொங்க ஒரு தொகை பணத்தை உண்டியலில்போட்டு வணங்கிய காட்சியின்—மாட்சி, மனித உள்ளங்களை என்ன என்னவோவெல்லாம் சிந்திக்கவைத்துவிட்டது.

இதில் பங்குகொண்ட நானும் — மெய்மறந்து நின்றேன்—கிளிநொச்சியில்கட்சி பேதம் இன்றி உண்டியலுக்கு எல்லா மக்களும் உதவியும், ஆதரவும் தந்தமை மற்றவர் நினைப்பது போன்று—கிளிநொச்சி தன்மானத் தமிழர் வாழும் ஒரு பகுதி என்பது உண்மையாகிறது.

———

## நவம் திகைத்தார்!

இம்மாதம் 2ம் திகதி சிறை இருக்கும் இளைஞர் குடும்பங்களுக்கு உண்டியல் மூலமாக நிதி திரட்டப்பட்டது. நிதி திரட்டும் பணியில் யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் சாவகச்சேரி பா. உ. திரு. வீ. என். நவரத்தினம் ஈடுபட்டுக்கொண்டிருந்தார்.

அப்பொழுது அந்த பஸ் நிலையத்தில் நாளாந்தம் பிச்சை எடுத்து ஜீவனம் நடாத்தும் ஒரு கால்முடமான ஒருவர்தான் சேகரித்து முடிச்சில் வைத்திருந்த சிறு தொகைப்பணத்தை அந்த உண்டியலில் போட்டார்.

இந்த மனிதரின் செயல் திரு. நவரத்தினம் அவர்களை திகைக்கவைத்துவிட்டது. உடனே அவர் தனது மணிபேசை எடுத்து கண் கலங்கியபடி தன்னிடம் இருந்த ஒருபகுதிப்பணத்தை அந்த (நொண்டி) ஒரு கால் ஊனமான மனிதரிடம் கொடுத்து முத்தமிட்டார்.

இந்த நிகழ்ச்சியை பார்த்து நின்ற பலர் மெய் சிலிர்த்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதல்வர் கலைஞர் கருணாநிதியின் கவிதை!

தமிழே! தேனே! தங்கக் கனியே
அமிழ்தே! அன்பே! அழகுக் கலையே!
எழிலே! அறிவே! எண்ணச்சுடரே!
பொழிலே! புகழே! பொன்னின் மணியே!
திருவே உருவே! திங்கட்குளிரே!
தருவே! நிழலே! நிழல்தரு சுகமே!
தாயே உந்தன் தாளிணை பற்றி
தலைமைக் கவிதை பாடிட வந்தேன்,
அண்ணா வழியில் அயராது உழைக்கப்
பண்ணால் முழங்கிப் பயணம் தொடர
கண்போல் கழகம் காக்கும் சூளுரை
விண்போய் முட்டிட உரக்கக்கூவுக!

ஃ ஃ

இன்றைக்கு நடந்தது போல் இருக்குதய்யோ கழகக்
கன்றை விட்டுப்பசு பிரிந்த அந்தக்காட்சி.
குன்றைத் துளைக்குமொரு வேலெடுத்துக்
குறிபார்த்து நெஞ்சைக் கிழித்ததுபோல்
என்றைக்கும் நமைவிட்டுப் பிரியாத அண்ணன்
அன்றைக்கு மறைந்துவிட்டான்; அய்யகோ!
ஆயிற்று ஏழெட்டாண்டு!
'கொன்றை வேந்தன்' என அவ்வையின் பாட்டுண்டு
—நம்
கொள்கை வேந்தனுக்கோ அழியாத பாட்டுண்டு!
பொங்கு கடல் நடையும் பூவையரின் மென்
நடையுந் தன்
புதுத் தமிழ் நடையில் காட்டியவன்.
பொல்லாங் குரைப்போரை வாதத்தில் மாட்டியவன்.
பொடியெடுத்துப் போடும் நேரம்
புன்னகையால் எதிரிகளைப்
பொடியாக்கி வாட்டியவன்
புழுதிக்குணம் படைத்தோரை ஓட்டியவன்...
பொன்மகுடம் தமிழ்த்தாய்க்குச் சூட்டியவன்
எழுதுகோல் வைத்திருந்தான் அண்ணன்—அது
ஏமாந்த தமிழர்களின் தலையெழுத்தை மாற்ற
தாளில் உழுதகோல்—நம்
நாளில் அழுதவரைச் சிரிக்கவைக்க
அவன் தந்த ஆட்சிக் கோல்!
குதிக்கால்கள் பரதம் ஆடப் பேச்சரங்கில்
கொய்யாத் தமிழ் எடுத்துக் கொடுத்திட்டார்
சதிகாரர், சாய்க்கின்றார் தமிழ்மொழியை
என்றபோது
அதிகார மிரட்டலுக்கு அஞ்சாமல் சிறைப்பட்டார்
அவர்,
மொழிப் போரின் மூலபலம்! களம் கண்டு
விழிப்போரைக் கண்டுகொண்டு—தன்னைப்
பழித்தோரைப் பாராட்டும் பண்பாளர்
அழித்தாராம் ஆதிக்க மொழி வெறியை!

ஃ ஃ

பலகார பட்சணம்—பாணிக்கிரகணம்
வதூவர கிரகப் பிரவேசம்—பந்துமித்திரர்
நமஸ்காரம் உபய குசலோபரி
நாமாவளி துவஜா ரோகணம்; என
நாக்குக்கு நுழையாத வடமொழிப்
படையெடுப்பால்
வாக்குக்குச் சுவை சேர்க்கும்
வண்ணத்தமிழ் வாடுவதோ
பாக்குக்கும் வெற்றிலை சுண்ணாம்புக்கும் அவர்
வாய் சிவக்கும்.
தாக்குதற்குத் தமிழைப் பிறமொழி
பெருகி வந்தால் அவர் கண் சிவக்கும்.
அக்ராசனாதிபதியை அவைத் தலைவராய்
உலவவிட்டார்
அந்த நாள் பிரசங்கம், சொற்பொழிவாய்
மாறிற்றின்று!
நமஸ்காரம் கிமஸ்காரம் எல்லாம்
நலமான தமிழிலே நல் வணக்கமாய் மலர்ந்தது
காண்!
தூய்மையாய்த் தமிழில் கொடியேற்றுவிழா
வந்தபின்னர்
துவஜாரோகணத்துக்கு அங்கென்ன வேலை?
வாய்மையே வெல்லுமென்றால்
'சத்யமேவ ஜெயதே' கோபித்தா கொள்ளும்?

ஃ ஃ

அண்ணனை ஒரு சீமான் என்பேன்
அவர் நண்பர்களையே செல்வமாய்ப் பெற்றிருந்தார்!
அண்ணனை ஒரு துறவி என்பேன்;
அவர் வாயெல்லாம் காவி தரித்திருந்தார்!
அண்ணனை ஒரு தெய்வம் என்பேன்;
அவருக்குத் துரோகிகளும் தூபதீபம் காட்டுகின்றார்!
அண்ணனை ஒரு கண்ணன் என்பேன்
அவரைப் பூதகியும் தூக்கிப் பால் கொடுக்கின்றாள்!
அண்ணனை ஒரு மன்னன் என்பேன்
அரியாசனமாய் அவர் நம் இதயத்தை
ஆக்கிக்கொண்டார்.

ஃ ஃ

அரியாசனங்கள் அவரை ஆரம்பத்தில்
புரியாமல் எதிர்த்ததுண்டு
சரியாசனச் சமதர்மம் போதிக்கவந்த
தென்னாட்டு மார்க்ஸ் என்று
பின்னால் தான் தெளிவடைந்தார்.

ஃ ஃ

நரியும் பரியாய்ப் போன கதை
நாரதர் பெண்ணாய் ஆன கதை
உறியைக் கண்ணன் உடைத்த கதை
ஊரார் போற்றிய பழைய கதை
எரியில் துரும்பாய் ஆக்கியவர்
பெரியார் தந்த பேரறிஞர்!

ஃ ஃ

அண்ணன் எழுதிய நூல் கொண்டு
சின்னக் கதை யொன்று நெய்கின்றேன்
"ஓர் இரவு சந்திரோதயத்தில்
நல்ல நம்பி வீட்டு வேலைக்காரி
ஓடுகிறாள் சந்திர மோகனிடம்.
காதல் ஜோதியிலே சொர்க்கவாசல் கண்டு,
கம்பரசம் பருகுகிறார்
—மொண்டு!
கண்டிருந்த பெற்றோருப் கடுங்கோபம்
கொண்டு
நியாயத்தை நிலை நாட்ட நீதிமன்றம்
சென்றார்;
வேலி போட்டுக் காதலைத்தான்
தடுத்திடவா வேண்டும்?
இந்தத்
தாலி போட்ட அத்தானை நான்
மறந்திடவா வேண்டும்?
தாய் மகளுக்குக் கட்டுவதா தாலி—
எனக்கேட்டு வாதிட்டாள் 'குமரிக்கோட்டம்'—
என்னாகும் அவள் முன்னே பணத்தின்
தோட்டம்?
நீதிதேவன் மயக்கத்தைப் போக்கி நின்று
நீவிர் வாழ்க நன்று என வாழ்த்திச் சென்றான்."

ஃ ஃ

இரக்கமெனும் ஒரு பொருளிலா அரக்கனென
இராவணனைக் கம்பன் இகழ்ந்தது செல்லாதென
உருக்கமிகு ஓவியத்தை எழுத்தால் தீட்டி
சுருக்கென்று தைக்கின்ற கேள்விகளால்
தேவலோகப் பிறவிகளைத் தெருவுக்கு
இழுத்து வந்தார்.
மேனிப்பசி முழுதும் தீர்ந்த பின்னர்
மேனகையைக் கைவிட்ட மாமுனியும்,
தந்திரத்தால் அகலிகையைப்... பார்த்த
இந்திரனும் இணையற்ற பெரு வேந்தும்,
கருணையின் வடிவங்கள் தாமோ?
கம்பரே! ராவணன்தான் கடுநெஞ்சக்
—காவலனோ
அண்ணன் எழுப்பிய வினாக்கணைக்கு
—இந்த
மண்ணில் எவர் தான் விடையளிப்பார்?

ஃ ஃ

'உண்டென்பார் சிலர் இல்லையென்பார் சிலர்
எனக்கில்லை கடவுள் கவலை—
ஒன்றே குலம் ஒருவனே தேவன்—இதை
ஒப்புவதே உண்மை ஆத்திகமாம்
ஒருவனை ஒருவன் ஏமாற்றாதிருப்பதே நாத்திகமாம்
நன்றே சொல்வேன் நமக்குக் கடவுள்
நலிந்தோர் சிரிப்பில் தான்—இதனைக்
கொள்கையாய் நாட்டுக என்றார்—அறிவுக்
கொடியை ஏற்றுக என்றார்.

ஃ ஃ

கழகம் தான் மெய்யான கம்யூனிஸ் டென்று
பழகு தமிழ் உவமையெலாம் காட்டியது
அண்ணனன்றோ?
வறுமையை ஒழித்திட அவர் காட்டியதே
நல்வழியன்றோ?
உரிமைகள் பெருகிட உண்மைகள் நிலைத்திட
அவர் உரைத்ததுதான் நெறியன்றோ?
நாடு தழைத்திட நற்றமிழ் வளர்ந்திட
அவர் நாவசைவே முரசன்றோ?
நாளும் அவர் நமையாளும் அரசன்றோ?

ஃ ஃ

வாரத்து நாட்களிலே புதனைத்தான்
தேர்ந்தெடுப்பர் வைதீகர்—
அண்ணா,
வாழ்ந்திட்ட நாட்களிலே எதனை நான்
தேர்ந்தெடுத்து நினைத்துப்பார்க்க!
"தம்பிவா! தலைமை தலைமை ஏற்க வா!" என்று
நாவலரை மாநாட்டில் அழைத்தாரே; அதனையா?
"தம்பியிருக்குமிடம் எனக்கு யாத்திரைத்தலம்"
என்று
பாளையங்கோட்டைதனில் பகர்ந்தாரே; அதனையா?
தீராத பிரச்சினையைத் தீர்ப்பதற்குச் சிந்திக்கப்
பேராசிரியர் வீட்டுக்குச் செல்வாரே; அதனையா?
பிரிய மனமின்றிப் பிரிந்திருந்த
பதினெட்டு ஆண்டின் பின்னே
பெரியாரின் முகம் காணச் சென்றோமே;
அவரோடு' அதனையா?
கணைகள் பல தாக்கினாலும் உன்னை—இந்தக்
கணையாழி காக்குமென்று கடற்கரையில்
அணிவித்தாரே; அதனையா?
எதனை நினைத்தாலும் எங்களண்ணா!
உனதுருவம்—ஏற்றமிகு திருவுருவம்
அதனை நினைத்தே யாம் ஆறுதலைக் கொள்கிறோம்:

ஃ ஃ

தம்பியுடையான் படைக்கஞ்சான்
என முழங்கிவிட்டுத்
தனி மரம் தோப்பாகாது எனச்சொல்வாய்
இங்கோர்
தனிமரம் தானேதான் தோப்பென்று
போனகதை நீ அறிவாய்,
'சனிப்பெயர்ச்சி' சிலருக்கு நல்லதென்பர்
புராணிகர்!
அது—மெய்யோ? பொய்யோ?
நம் கழகத்தில் சனிப்பெயர்ச்சி
நற்பலனைத் தந்த தண்ணா!
உன்வழியில் உழைக்கின்றோம் அதனாலே
ஒதிய மிலார்—முருங்கைக் கொம்பு—
ஒடிபட்டுச் சிதறுதல் போல்—பகை
முறிபட்டுப் பஞ்சாய்ப் போகும்!
நீ தந்த விளக்கெடுத்து நடக்கிறோம்
நெய்யிட்டுத் திரியிட்டு உதவுகின்றார் தமிழ்மக்கள்
கடுமழையில் அணையாமல் காற்றுக்கு நடுங்காமல்
கரம்பொத்திக் கைவிளக்கைக்காக்கின்றோம்.
வரம் ஒன்று தந்திடண்ணா!... நான்
தவம் இருந்து கேட்கின்றேன்
அடித்தளத்து மக்களுக்கு
அடுக்கடுக்காய்ச் சாதனைகள்
அண்ணா! உன் வழி அயராமல்
நடப்பதெல்லாம்
கண்ணால் ஒருமுறை நீ பார்த்து விட்டால்
எம் கவலையெல்லாம் பறந்து போகும்.
தண்ணார் முழுநிலவே
தட்டாமல் நீ வந்துவிடு!
இந்த வரம் நீ தந்தால்
இறவா வரம் பெற்றதுபோல்
இன்பத் தமிழகமே கூத்தாடும்—எங்கள்
துன்பமெலாம் தொலைந்து விடும்.

## முடிவுரைக் கவிதை:

முடிவுரை எதற்காக இன்று?
'அண்ணா வாழ்க' என்பதே நமக்கு
முதலுரையும்
முடிவுரையும்!
அதனாலே அனைவரும் சொல்வோம்:
அண்ணா வாழ்க!
அண்ணா வாழ்க!
அண்ணா வாழ்க!
வணக்கம்!

—அண்ணா கவியரங்கில்
முதல்வர் கலைஞர் பாடிய
தலைமைக் கவிதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## அறிக்கை 'வீரர்'கள்!

திறமையும் தகுதியுமுடைய தமிழ் மாணவர்களை முதுகில் குத்தி குப்புறத்தள்ளி வீழ்த்திவிட்டு—தகுதியற்றவராயிருப்பினும் பல்கலைக் கழகத்துக்கு சிங்கள மாணவர்களே பெருவாரியாக தெரிவு செய்யப்படுவதற்கு வாய்ப்பளிப்பதற்காக கொண்டுவரப்பட்ட கொடூரமானதும் பாரபட்சமானதும் படு துரோகத்தனமானதுமான திட்டமே மொழிவாரித் தரப்படுத்தல் முறையாகும்.

தமிழ் மாணவர்கள் பொறியியல் நிபுணர்களாகவும், டாக்டர்களாகவும், கட்டடக் கலைஞர்களாகவும், இன்னும் பல்துறை நிபுணர்களாகவும் வாராமல் தடுப்பதற்காக திட்டமிட்டு செய்யப்பட்ட சூழ்ச்சியே இதுவாகும்!

ஓர் இனத்தின் அறிவாற்றலுக்கு வேண்டிய உயர் கல்வியை நாசப்படுத்தி விட்டால், அந்த இனத்தை சுலபத்தில் அடிமைப்படுத்தி அழித்தொழித்து விடலாம் — என்கிற நச்செண்ணத்துடன்தான் சிங்கள அரசு 1970ம் ஆண்டு முதல் கடந்த ஐந்தாண்டுகளாக இந்நாட்டில் தரப்படுத்தல் திட்டத்தைப் புகுத்தி தமிழர்களின் உயர் கல்விக்கு வேட்டு வைத்து வருகிறது.

இந்த அநியாயத்தை எதிர்த்து — அக்கிரமத்தை எதிர்த்து தமிழ் மாணவர்கள் பொங்கியெழுந்து போராடினார்கள்— அப்படிப்போராடிய இளைஞர்கள் பலர் இன்றைக்கும் சிறைக்கம்பிகளுக்கு பின்னால் தள்ளப்பட்டிருக்கிறார்கள்!

தமிழ்க் கல்விமான்கள் மட்டுமல்ல — நல்ல உள்ளம் படைத்த சிங்களக் கல்விமான்கள் கூட தரப்படுத்தலுக்கு எதிராக கருத்துத்தெரிவித்து வந்திருக்கிறார்கள்!

தரப்படுத்தல் தகாதது—பாரபட்சமானது—தீமைபயப்பது என்பதை தமிழர் கூட்டணியினர் தேசிய அரசுப் பேரவையில் எடுத்துச்சொன்ன ஒவ்வொரு தடவையும் 'தரப்படுத்தல்' நியாயமானதே யென்றும்—எவ்வித பாரபட்சமும் அதில் காட்டப்படவில்லையென்றும் அரசு பிடிவாதமாக மறுத்து வந்தது — பிடிசோற்றுள் முழுப்பூசினிக்காயை மூடிமறைத்து வந்தது!

மொழிவாரித்தரப்படுத்தல் அநீதியானதுதான் என்பதை இப்போது உணர்ந்து அதை நீக்க வேண்டும் என்று பரிந்துரை செய்துள்ள பீட்டர் கெனமனும் அவரது கட்சியைச்சேர்ந்த துடாவையும், ஏனையோரும் கூட—கடந்த காலங்களில் தரப்படுத்தல் சரியானதுதான் என்று அடித்துப்பேசி அரசின் அநீதிக்கு உதவிபுரிந்து ஒத்துழைப்பு நல்கி வந்ததை நாம் மறந்து விடமுடியாது!

மொழிவாரித்தரப்படுத்தல் முறையை கைவிடவேண்டுமென்ற கெனமனின் பரிந்துரையை இப்போது அரசு நிராகரித்துவிட்டது. மொழிவாரித் தரப்படுத்தலைத்தொடர்ந்து நடைமுறைப்படுத்துவது என்று முடிவுசெய்ததன் மூலம் பல்கலைக்கழக அனுமதி விடயத்தில் அரசு தமிழ் மாணவர்களுக்கு தொடர்ந்து அநீதி இழைக்கப் போகிறதென்பது திட்டவட்டமாகத் தெரிந்துவிட்டது!

இனி கெனமனும் அவரது கட்சியினரும் என்னசெய்யப்போகிறார்கள்?

'தரப்படுத்தல்' தொடரும்; தமிழ் மாணவர்கள் தொடர்ந்தும் ஒதுக்கப்படுவார்கள்; அநீதியும் அநியாயமும் ஆட்சிபுரியும்; இந்த அநீதிக்கு பீட்டர்கெனமனும் அவரது கட்சியினரும் பக்கவாத்தியம் வாசித்துக்கொண்டிருப்பார்கள்!

ஆம், கூட்டுப்பொறுப்பு (Collective Responsibility) என்கிற முறையில் அரசு தமிழ் மக்களுக்கு இழைக்கும் அத்தனை தீமைகளிலும், அரசுடன் ஒட்டியிருக்கும் ஒவ்வொருவருக்கும் பங்குண்டு! இதை எவருமே மறுக்கமுடியாது.

அரசுடன் சேர்ந்து தமிழினத்துக்கு 'சமாதி' கட்டிவரும் அருளம்பலம், தியாகராசா போன்ற ஒத்துழைப்புத் தம்பிரான்களும் தாமும் தரப்படுத்தலை எதிர்ப்பதாக வீரகேசரியில் அறிக்கை விட்டிருக்கிறார்கள்!

வீரகேசரியில் அறிக்கை விட்டு தங்களையும் வீரர்களாக காட்டிக்கொள்வதால் இவர்கள் தமிழ் மக்களை ஏமாற்றிவிடமுடியாது!

இதுவரை காலமும் தரப்படுத்தலினால் மட்டுமல்ல—தமிழ் மக்களுக்கு அரசு இழைத்துவரும் அத்தனை அநீதிகளுக்கும் ஒத்துழைப்பு நல்கி தமிழ் மக்களின் வெறுப்புக்கு ஆளாகி இருப்பவர்கள் இவர்கள்!

# கிளிநொச்சியில் தமிழர்களை பௌத்தர்களாக்க முயற்சி!

## பிக்குவின் சூழ்ச்சியை முறியடிக்கும்படி தமிழ் இளைஞர் பேரவை அறைகூவல்!

கிளிநொச்சி பாமர மக்களை பௌத்தர்களாக மாற்றும் முயற்சியில் சிங்கள வெறிபிடித்த பௌத்தபிக்கு ஒருவர் கபடநாடகம் ஆடிவருவதாகத் தெரிகிறது குறித்த பிக்குவின் வலையில் விழாதிருக்குமாறு கிளிநொச்சி வாழ் தங்கத் தமிழர்க்கு அறைகூவல் விடுக்கிறார், கிளிநொச்சித் தொகுதி இ. பே. தலைவர் ஐ. திருஞானம்.

இதுபற்றி அவர் சுதந்திரனுக்கு எழுதுவதாவது:— கிளிநொச்சித் தொகுதியில் அமைந்திருக்கும் "லக்சபானா" டிப்போவிற்கு அருகாமையில் உள்ள அரசாங்கக்காணியை கி. தொ. தமிழ் மகாவித்தியாலயத்திற்கென அரசாங்கம் கொடுத்திருந்தது. அதனை அவ்வூர் ஏழை விவசாயிகள் அத்துமீறி காடுவெட்டித் திருத்தி குடியேறியிருக்கிறார்கள்.

இவர்களை அக்காணிகளை விட்டு வெளியேறும்படியும் வேறு இடத்தில் அரை ஏக்கர் வீதம் காணிகள் தருவதாகவும் உயர் அதிகாரிகள் உறுதியளித்திருந்தார்கள். "தமிழ் மகாவித்தியாலயம் கட்டுவதற்காக விட்டு வருகிறோம் என்று கூறி வெளியேற இருந்த அப்பாவித் தமிழர்களை வெறிபிடித்த பிக்கு ஒருவர் ஆசைகாட்டி மோசம் செய்து விட்டாராம்.

நீங்கள் காணிகளை விட்டு வெளியேறவேண்டாம். உங்களுக்கு காணிக்குரிய "பேமிற்" எடுத்துத் தருகிறேன். அதற்குள் நீங்கள் எல்லோரும் "பௌத்தர்களாக மாறி" ஒரு விகாரையும கட்டி முடித்துவிடுங்கள்!" என்று ஆசைகாட்டியதாக சொல்லப்படுகிறது. அரை ஏக்கர் காணிக்கு ஆசைப்பட்ட மக்கள் உடனே ஒரு பத்திரத்தில் தாங்கள் பௌத்தர்களாக மாறுகிறோம் என்று கையெழுத்துப்போட்டு கொடுத்திருக்கிறார்கள். இதன் பின் ஒரு காணித்துண்டில் "சிங்கள பௌத்த சம்மேளனம்" என்று ஒரு பெயர்ப் பலகை மாட்டப்பட்டிருக்கின்றது. அத்தோடு விகாரையும் கட்டுவதற்கு தீவிர முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

இந்த அநியாயத்திற்கு ஆளாக்கப்பட்ட அப்பாவி மக்களை ஆனந்தப்படுத்துவதற்கு பிககுவின் வேண்டுகோளின் பொருட்டு கொழும்பில் இருந்து "குல து[illegible]" என்பவர் வந்து அ[illegible] மக்களுக்கு உங்க[illegible]கே காணிகளை தரு[illegible] ஒழுங்கு செய்கிறேன். அதற்கிடையில் உங்களுக்கென ஒரு விகாரையை கட்டி பௌத்தர்களாக மாறிவழிபடும்படி ஆசை காட்டிப்போயிருக்கிறாராம்.

இதைத் தொடர்ந்து பௌத்தபிக்கு மிக ரகசியத் திட்டங்களை தீட்டிவருவதாகப் பேசப்படுகிறது.

எனவே இந்த அக்கிரமத்திற்கு ஆப்புவைக்க வேண்டுமென கிளிநொச்சி தொகுதி தமிழ் இளைஞர் பேரவை வேண்டுகோள விடுக்கிறது.

அமிர் அண்ணா தலைமையில் தமிழீழம் அமைப்பதற்கு தயாராகும்படி தங்கத் தமிழ்ச் செல்வங்களை வேண்டுகிறேன் என்றும் திரு. திருஞானம் தமது அறிக்கையில் கூறுகிறார்.

## மடுத் திருப்பதி...

—1-ம் பக்ககத் தொடர்

தனராம். அந்நேரம் அங்கிருந்த சிங்களக் குரவர்கள் எதுவிதத்திலும் அச் சிங்களக் காடையரை வன்செயலில் ஈடுபடாது தடுக்க எதுவும் செய்யாமல் தொலைவில் நின்றுவிட்டார்களாம்!

அதன் பின் இக்காடையர்கள் ஆலய மணியை நெடுநேரமாக அடித்ததால் மணியே அறுந்து கீழே விழுந்துவிட்டது. இப்படியே இரு மணிசதியாலங்களுககு மேல் திருப்பதியில் ஒரே அமளிதுமளியாக இருந்தது. காடையர்கள் இன்னும் ஒரு படி மேலே சென்று தமிழரான கோட்டாறு ஆயரை ஆலயத்தில் பூசை சொல்ல விடாது சடுப்போம் எனச் சவால் விட்டனர். காடையரின் மிரட்டலுக்கு யாழ் ஆயர்கூட அடிபணிய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு விட்டதென்றும் இதன் காரணமாக கோட்டாறு ஆயர் குருமனையிலேயே தனிமையாகப் பூசை சொல்ல வேண்டியதாயிற்று என்றும் கூறப்படுகிறது.

மடுத்திருப்பதியில் சிங்களத்தில் மட்டும் ஆராதனைகளை நடத்தவேண்டும் என்றும் சிங்களவருக்கே கடைகள் கட்ட இடம் அளிக்க வேண்டும் எனறும் இப்படியான வகுப்புவாத எண்ணங்களை நடைமுறைக்குக் கொண்டுவரும் நோக்கமாகச் சமயாசாரப் போர்வையில் இவர்கள் காடைத்தனத்தில் இறங்கினராம்.

இதற்கு முந்திய ஓர் ஆவணித் திருநாளின்போது குடிபோதையில் ஈடுபட்டு குழப்பம்பண்ண முயன்றதால் நீதிமன்றத்திற்கு கொண்டுபோகப்பட்ட காடையர் சிலரே இவ்வாண்டில் திட்டமிட்டு இவ்விதம் நடந்து கொண்டனராம்— சமயாசாரப் போர்வையில் இவர்கள் கலகம் விளைவிப்பதற்குச் சிங்கள மதகுருக்களும் உடந்தையாய் இருந்தனர் என தமிழ் கத்தோலிக்க மக்கள் கருதுகிறார்கள்.

இந்த அனுசாரமான சம்பவத்தைப் பயன்படுத்திக் கொழும்புப் பேராயர் குறே சிங்களத்தில் மட்டும் ஆராதனைகளை நடத்தும்படி நிர்ப்பந்தித்தார் என்றும் யாழ் ஆயரும் அதற்கு அடிபணிந்ததனால் இவ்வாண்டு ஐப்பசித் திருநாளின்போது முன் எப்போதும் நடைபெறுத விதமாகச் சிங்களத்திலேயே ஆராதனைகள் நடத்தப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது.

1893ல் யாழ் மறை மாவட்டத்திலிருந்து வடமேல் மாகாணத்தைப் பிரித்துக் கொழும்பு மறைமாவட்டத்துடன் இணைத்துக் கொண்ட காலந்தொட்டு, மடுத்திருப்பதியில் கண்ணோட்டம் கொண்ட கொழும்பு மறைமாவட்டம் சிங்கள இனவெறியரின் காடைத்தனத்தைப் பயன்படுத்திப் பரிபாலனத்தை தமதாக்கிக் கொள்ள முனைகிறதாம், யாழ் ஆயர் அடிபணிந்து விடுவாரோ எனத் தமிழ்க் கத்தோலிக்க மக்கள் கவலை கொள்கிறார்கள்.

புதிதாக அமைக்கத்திட்டமிட்டுள்ள அனுராதபுர மறைமாவட்டத்தின் கீழ் மடுத்திருப்பதிப்பரிபாலனத்தைக் கொண்டுவரும்படி சிங்கள இன வெறியர் கேட்கிறார்களாம். இதற்குச் சிங்கள மத குருக்களின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கிறதாம், அத்துடன் கொழும்புப் பேராயரின்

—5-ம் பக்கம் பார்க்க

தரப்படுத்தல் கொள்கையை அரசு கைவிட மறுத்துவிட்டது—இந்நிலையில் இவர்களிடம் அந்தரங்க சுத்தியிருக்குமானால் அரசிலிருந்து உடனடியாக இவர்கள் வெளியேறியிருக்கவேண்டும்!

ஆனால் பதவி மோகமும் அடிமைச் சுகபோகமும் நிறைந்து காணப்படும் இவர்களிடம் இத்தகைய கொள்கை வீரத்தை மருந்துக்குத்தானும் நாம் எதிர்பார்க்க முடியாது!

இவர்களது தலைவர் குமாரசூரியர் தரப்படுத்தல் வந்தால் பதவியை உதறியெறிவேன் என்று 1970ம் ஆண்டு சுழிபுரத்தில் வீராவேசம் பேசியதும்—தரப்படுத்தல்வந்து தமிழ் மாணவர்கள் கடந்த ஐந்தாண்டாக ஒதுக்கப்பட்டும், குமாரசூரியர் 'கப்சிப்' பென்று வாயை மூடிக்கொண்டு பதவியில் ஒட்டியிருப்பதும் தமிழ் மக்கள் மறந்து விட்ட சம்பவம் அல்ல!

எனவே தமிழ் மக்களை — தமிழ் இளைஞர்களை தமிழ் மாணவர்களை போலித்தனத்தாலும், பாசாங்குப்பேச்சுக்களினாலும் யாரும் ஏமாற்றி விடமுடியாது. தரப்படுத்தல் போன்ற நோய்களுக்கெல்லாம் மூல காரணம் தமிழன் இந்நாட்டில் அடிமையாக இருப்பதுதான் என்கிற உண்மையை உணர்ந்து தமிழ் சமுதாயம் மீண்டும் தன்னைத்தானே ஆள உறுதிபூண்டு போராடி வருகிறது.

ஆம், தமிழினம் வாழவேண்டுமெனில் அது தன்னைத்தானே ஆளவேண்டும். இதை ஒவ்வொரு தமிழனும் உணர்ந்து [illegible] விடுதலைப் போருக்கு தன்னை [illegible] காலம் அதிக தூரத்தில் இல்லை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியப் பிரஜைகளாக முன்வராத—

# 2 இலட்சம் தொழிலாளர்களையும் என்ன செய்யப்போகிறீர்கள்?

## இரண்டு ஒப்பந்தங்களாலும் பிரச்சினை தீரவில்லை!

### தோட்டத் தேசியமய மசோதாவில் உடுவில் பா. உ. உரிமை முழக்கம்!

"மலைநாட்டுத் தமிழர்கள் சம்பந்தமாக இரண்டு ஒப்பந்தங்களை இலங்கை அரசு இந்திய அரசுடன் செய்துள்ளது. இந்த இரண்டு ஒப்பந்தங்களாலும் இந்தப் பிரச்சினை தீரப்போவதில்லையெனபது இப்போது தெளிவாகிவிட்டது. இந்த ஒப்பந்தங்களின்படி ஆறு இலட்சம் நாடற்றவர்கள் இந்தியக் குடியுரிமையை த[illegible]ாகவே வலிந்து ஏற்று இந்தியா செல்லவேண்டும். ஆனால் நான்[illegible] இலட்சம்பேர் மட்டுமே இந்தியக் குடியுரிமைக்கு மனுசெய்திருக்கிற[illegible]ள். இந்திய அரசாங்கம் இந்தியக் குடியுரிமை இடாப்பை மீண்டும்[illegible]முறை திறக்கப்போவதில்லையென அறிவித்துவிட்டது. இந்நிலையில் இந்தியக் குடியுரிமையை ஏற்கமறுத்து இந்நாட்டிலேயே வாழ விரும்பும் மீதமுள்ள இரண்டு இலட்சம் பேரை என்ன செய்யப்போகிறீர்கள்?"

---இவ்வாறு தோட்டங்கள் கையேற்பு தொடர்பான மசோதா மீது தேசிய அரசுப் பேரவையில் உரை நிகழ்த்திய உடுவில் பா. உ. திரு. வி. தர்மலிங்கம் குறிப்பிட்டார்.

தோட்டத்தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரம் உயர இலங்கை அரசு செய்யவேண்டியவை பற்றி இலண்டனிலுள்ள **WAR On WANT** இயக்கத் தலைவி எடிக்பொண்ட் அம்மையார் வெளியிட்டுள்ள அறிக்கையையும் அமைச்சர் கொபேகடுவவின் வேண்,கோளின்பேரில் அமைச்சரிடம் திரு. தர்மலிங்கம் சபையில் வைத்துக் கையளித்தார்.

திரு. தர்மலிங்கம் பா. உ. தொடர்ந்து பேசியதாவது:-

"சோசலிச சமுதாயம் ஒன்றைக் கட்டியெழுப்ப விரும்புபவர்கள் முதலில் செய்திருக்கவேண்டியது தோட்டங்களை தேசியமயமாக்குவதுதான். என்றோ செய்திருக்கவேண்டிய காரியத்தை இன்றுதான் செய்கிறீர்கள். தேசிய வளங்களை பொதுவுடமையாக்காவிடின் திட்டமிட்ட பொருளாதாரமே சோசலிச அமைப்புக்கு அடிப்படையானதாகும். அந்த வகையில் தோட்டங்களை நாட்டுடைமையாக்கும் நற்செயல் காலம் கடந்தாவது நடைபெறுகிறதே என்கிற மனத்திருப்தியுடன், சோசலிசவாதிகளாகிய நானும் தமிழர் கூட்டணியும் இம்மசோதாவை மகிழ்வுடன் வரவேற்கிறோம்.

முன்பே தேசியமயத் திட்டம் ஏன் சாத்தியமில்லை என்பதறகு காலஞ்சென்ற திரு. பண்டாரநாயகா ஒரு காரணததை முன்பு கூறியிருந்தார். மலைநாட்டுத் தமிழர்களின் நாடற்ற பிரச்சினை தீர்க்கப்படாமல் தோட்டங்களை தேசியமயமாக்குவது சாத்தியமில்லையென்பது அவரது கருத்தாக இருந்தது.

பிரதமர்:- இப்போதுதான் அந்தப் பிரச்சினை தீர்க்கப் படடுவிட்டதே!

தர்மலிங்கம்:- எங்கே தீர்க்கப்பட்டிருக்கிறது? நீங்கள் இந்தியாவுடன் செய்துகொண்டுள்ள இரண்டு ஒப்பந்தங்களின்படியும் ஆறு இலட்சம் பேர் இந்தியப் பிரஜாவுரிமை பெற்று இந்தியாவுக்கு செல்லவேண்டும். ஆனால் இந்திய பிரஜாவுரிமைக்கு 4 இலட்சம் பேர் மட்டுமே இதுவரை விண்ணப்பித்திருக்கிறார்கள். மீதி இரண்டு இலட்சம் பேர் இந்தியக் குடியுரிமை கோர முன் வரவில்லை. இந்திய அரசோ, இந்தியக் குடியுரிமை இடாப்பை மீண்டும் திறப்பதில்லையென உறுதியாகக் கூறிவிட்டது. இந்நிலையில் இரண்டு இலட்சம் பேரை என்ன செய்யப்போகிறீர்கள்?

பிரதமர்:- கனம் உறுப்பினர் இந்தியாவின் சார்பில் பேசுகிறார்!

தர்மலிங்கம்:- உழைப்பவனுக்கே நிலம் சொந்தமாக வேண்டும் என்பதுதான் சோசலிசம். கடாகக்கிடந்த மலைநாட்டைத் திருத்தி பொன் விளையும் பூமியாக்கிய மலைநாட்டுத் தமிழ் தோட்டத் தொழிலாளிக்கு அந்த மண்ணில் உரிமையில்லையென்றுகூறி நாட்டைவிட்டு விரட்டியடிக்கிறீர்கள். இது என்ன சோசலிசம் என்பது எனக்கு விளங்கவில்லை,

தோட்டத்தொழிலாளர்களின் பிரச்சினை அரசாங்கத்தின் கவனத்தை ஈர்க்காவிட்டாலும் உலகின் கவனத்தை ஈர்த்துவிட்டது. தோட்டத் தொழிலாளர்களின் அவல நிலையை இங்கு வந்து பார்வையிட்ட இங்கிலாந்திலுள்ள war on want (வறுமை எதிர்ப்பு இயக்கம்) தலைவி எடித்பொண்ட் அம்மையார் அவர்களது பரிதாப நிலையை கண்ணீர் வரும்படி உருக்கமாக எழுதியிருக்கிறார். இதன் மூலம் தோட்டத் தொழிலாளர்களுக்கு இங்கு இழைக்கப்படும் கொடுமை உலகெலாம் தெரியவாரம்பித்துவிட்டது! தோட்டத் தொழிலாளர்கள் உணவின்றி உடையின்றி உறைவிடமின்றிப் பிச்சையெடுத்து வருகிறார்கள். அவ்வாறு பிச்சை எடுப்பவர்களையும் தொண்டமானால் கொண்டுவரப்பட்ட 'கள்ளத்தோணிகள்' என அமைச்சர் வர்ணித்துள்ளார். அவர்கள் உண்மையிலே சட்டவிரோத குடியேற்றக்காரர்களானால், நீதிமன்றத்தில் நிறுத்தி தண்டித்திருக்கலாமே! நீங்கள் அப்படிச் செய்யத்தவறியதே உங்கள் கூற்று உண்மையல்ல என்பதை எடுத்துக் காட்டிவிட்டதே!

"இலண்டனிலுள்ள எடித் பொண்ட் அம்மையார் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கை வசதிகளை உயர்த்துவதற்கு அரசாங்கம் செய்ய வேண்டியவை எவை எனக் குறிப்பிட்டுள்ளார். அவற்றை இங்கு வாசிக்கிறேன்!

அமைச்சர் கொபேகடுவ:- அதில் ஒரு பிரதி எனக்கும் கொடுங்கள்.

(திரு. தர்மலிங்கம் கையளித்தார்)

## தரப்படுத்தலை...

—1-ம் பக்கத் தொடர்

தரப்படுத்தல் அநீதியானது என்பதை உணர்ந்து அது நிராகரிக்கப்படவேண்டும் என்று கெனமன் குழு சிபார்சு செய்த பின்னரும் கூட சிங்கள இனவெறியருக்குப் பயந்து அந்த அநீதியை தொடர்ந்து கடைப்பிடிப்பது என்று அரசு செய்த முடிவை எதிர்த்து தீவிரமானதோர் போராட்டத்தை தமிழ் மாணவர்கள் ஆரம்பிக்கக்கூடிய அறிகுறிகள் தென்படுகின்றன.

வட்டுக்கோட்டை பா. உ. தியாகராசவும், நல்லூர் பா. உ. அருளம்பலமும் தாங்களும் தரப்படுத்தலை எதிர்ப்பதாக பத்திரிகைகளில் அறிக்கை விடுகின்றனர். கடந்த ஐந்தாண்டுகளாக தொடர்ந்து தரப்படுத்தலால் தமிழ மாணவர்கள் ஒதுக்கித் தள்ளப்பட்டு வந்தபோது இவர்கள் எங்கேயிருந்தனர் என்பது தெரியவில்லை. இப்போது தரப்படுத்தலை எதிர்ப்பதாகக் கூறும் இவர்கள், அரசு இவாகளது எதிர்ப்பை உதாசீனம் செய்துவிட்டு தரப்படுத்தலை செய்யும்போது அரசை எதிர்த்து வெளியேறுவார்களா! அந்த அளவுக்கு இவர்களுக்கு சூடு, சொரணை அந்தரங்க சுத்தி உண்டா? என்று தமிழ் இளைஞர் பேரவைப் பிரமுகர் ஒருவர் சுதந்திரன் நிருபரிடம் தெரிவித்தார்.

தரப்படுத்தலுக்கு எதிராக எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஆராய்வதற்கு தமிழர் கூட்டணியின் பாராளுமன்றக் குழு 24-10-75 வெள்ளிக்கிழமை கொழும்பில் பெரியவர் தந்தை செல்வாவின் இல்லத்தில் கூடி ஆராயவிருக்கிறது.

## வன்னியசிங்கம்...

—2-ம் பக்கத் தொடர்

சேர்ந்தது. இலங்கை சுதந்திரமடைந்த 48ல் தேசபிதா டீ. எஸ். சேனநாயக்கா அவர்கள் பாராளுமன்றத்தில் i இலங்கைப் பிரஜா உரிமைச் சட்டம்; ii குடியேற்ற வெளியேற்றச் சட்டம் iii இந்திய பாகிஸ்தானிய பிரஜா உரிமைச் சட்டங்களை அடுக்கடுக்காக நிறைவேற்றினர். இந்தக் கைமுனு சனநாயக சட்டத்தால், மலையகத்துள்ள எட்டுத் தமிழ்பேசும் பிரதிநிதிகளின் பாராளுமன்ற அங்கத்துவம் சிதறடிக்கப்பட்டது. தமிழ்பேசும் மக்களை அடிமைகளாக்கி அழித்தொழிக்கும் இனக்கொலைச் சட்டத்தை—தமிழினத்தின் சுதந்திர இறைமையை நிலைநாட்டவேண்டியவர்கள் ஆதரித்து வாக்களித்ததைக் கண்டு திரு. செல்வநாயகம் திரு வன்னியசிங்கம், திரு. சிவபாலன் முதலியோர் எதிர்த்து வாக்களித்தது மட்டுமல்ல தமிழ்பேசுமினத்தின் வீர சுதந்திர வரலாற்றுக்குக் கால்கோளும் இட்டனர். வாக்களிப்போ கொந்தளிப்பில் முடிந்தது. செல்வாவும் வன்னியரும் வரலாற்றை வளர்க்கும் இயக்கமாக இலங்கைத் தமிழரசுக் கட்சியை அமைத்தனர். திரு. வன்னியசிங்கம் இன்றேல் தமிழரசுக்கட்சி தோன்றியிருக்க முடியாது" என்று தந்தை செல்வா கூறியதே சான்றாகும்."

## இலங்கை இந்து பொறுப்பாசிரியர்

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் வெளியீடாக வெளிவரும் 'இலங்கை இந்து' சஞ்சிகையின்பொறுப்பாசிரியராக திரு நாகலிங்கம் ஐயா அவர்களே பணிபுரிவதாக மன்றத்தினர் அறிவித்துள்ளனர்.

## மடுத்திருப்பதி

—4-ம் பக்கத் தொடர்

எல்லைமீறிய தலையீடும் அதிகமாக இருப்பதால் இலங்கைத் திருச்சபையிலேயே பிரிவினையை ஏற்படுத்தக்கூடிய ஓா சூழ்நிலை உருவாகக் கூடுமோ என்று பல கத்தோலிக்கர்கள் கவலை கொள்கின்றனர்.

இலங்கையில் பரிசுத்த பாப்பரசரின் பிரதிநிதியான பேராயர் பேரருட் திரு கார்வோ கூறிஸ் ஆண்டகை என்றாலும் இவ்விடயத்[illegible] தமிழ் கத்தோலிக்க மக்கள் ஏங்குகின்றனர்.


வாழ்த்தொலி கூறும் அன்பர்களுக்கோர் நற்செய்தி!

தீபாவளி திருநாளை சிறப்பிக்கும்

சுஜிகலாவின் வாழ்த்து மடல்கள்

கண்ணைக் கவரும் வண்ணங்கள் பலப் பல!
எண்ணங்கவரும் கருத்துக்கள் பல!

வாழ்த்துக்களெல்லாம். கவருடன் விலை குறிப்பிடப்பட்டுள்ளன

| | அளவு | 100க்கு | டசின் |
|---|---|---|---|
| நிர். 1-A. கட்டிங் லித்தோ கார்ட் | | 180/- | 27/- |
| நிர் 1-B. நவீன ,, ,, | 10x7 | 65/- | 9/50 |
| நிர். 2 புதிய லித்தோ கார்ட் | 6x4 | 22/- | 3/50 |
| நிர்: 3 புதிய படங்களுடன் அஞ்சல் அட்டைகள் | | 13/- | 2/- |
| நிர். 4 மொட் கலர் வட்டவடிவில் புதிய தயாரிப்பு | 7x5 | 60/- | 8/50 |

முன்கூட்டியே ஓடர்களை தந்து சகல டிசைன்களிலும் வி. பி. பி. மூலம் பெற்றுக்கொள்ளலாம். சாம்பிள் செட் பெற விரும்புவோர் ரூபா 4/50 அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.

தயாரிப்பாளர்:-

சுஜிகலா இன்டஸ்றீஸ்,
கொழும்பு — 14.

விற்பனை நிலையம்:- சுஜிகலா இன்டஸ்றீஸ், 135/1 செட்டியார் தெரு, கொழும்பு-11.

சாந்தி ஸ்டோர்ஸ், கொழும்பு:13.

மலர்விழி ஸ்டோர்ஸ், கொழும்பு-11.



கந்தர் சஷ்டி கவசம்

15 மில்க்வைற் நீலசோப் அல்லது 2 பார் சோப், அல்லது 2 நீம் சோப் மேலுறைகளை அனுப்பி மேற்படி புத்தகம் ஒன்றைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம். யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தமிழ் ஈழத்தின் தேசியப்பண்

# ஊர்தோறும் முழங்குவோம்!

தமிழ் ஈழத்தின் எதிர்கால விடுதலை வாழ்வில் தமிழ் மக்களுக்கு ஏற்றமான உன்னத வாழ்வு கிட்டுமென்பதில் உறுதி பிறக்கவேண்டும். அந்த உறுதி தமிழ் இளைஞர்களுக்கும், தமிழ்த் தலைவர்களுக்கும் ஏற்பட்டால் மட்டும் போதாது. சாமானிய தமிழர் ஒவ்வொருவரிடத்தும் அந்த மன வைராக்கியம் ஏற்பட்டே தீரவேண்டும். அப்போதுதான் தமிழ் ஈழ மக்களிடம் தாம் ஒரு தனித்தேசிய இனம் என்னும் உணர்வு மலரும். அந்த எண்ணம் அவர்கள் சிந்தனையில் சுதா தொழிற்படத் தொழிற்பட வீர சுதந்திரம் பெறுவதற்கான வழிவகைகளைத் தலைவர்கள் இளைஞர்கள் மட்டுமல்லாது சாதாரண மக்களும் நாடத் தலைப்படுவர்.

உடுவிலில் இடம் பெற்ற தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாடொன்றில் மறைந்த நாதஸ்வர மேதை கோவிந்தசாமி அவர்கள் தமிழ் ஈழத்தின் விடுதலைப் பண்ணைத் தேசியக்கொடி ஏற்றப்பட்ட சமயம் இசைத்தது இன்னமும் என் மனக்கண்முன் தோற்றுகிறது. அந்த நினைவும் தோற்றமும் எமது உடலில் ஒரு புல்லரிப்பை இன்றும் ஏற்படுத்துகிறது. தமிழ் இசைப் பாடகர் எத்தனை பேர் வாத்தியக் குழுவினர் யார் இன்று தமது நிகழ்ச்சிகளை ஆரம்பிக்கும் போதும் முடிக்கும்போதும் தமிழ் ஈழத்தின் தேசியப் பண்ணை இசைக்கின்றனர்.

இந்திய சுதந்திரப் போராட்ட காலம் எப்படி இருந்தது? விடுதலை வேட்கைச் சமுதாயம் முழுவதையும் ஊடறுத்து இருந்த காரணத்தால் இரவிந்திரநாத் தாகூரின் தேசியப் பண்ணுக்கும் தமிழ் நாட்டில் பாவேந்தர் பாரதியின் “வந்தே மாதரம்” பாடலுக்கும் நாமக்கல் கவிஞர் போன்றோரின் பாடல்களுக்கும் முக்கியத்துவம் தந்து மக்களிடம் அமோக பாராட்டைப் பெற்றார்கள்.

தமிழ் ஈழத்தின் இன்றைய நிலை? தமிழர் கூட்டணி, மற்றும் சார்பான இயக்கக் கூட்டங்களில் மட்டுமே தேசியப் பண் ஒலிக்கிறது. அது போதாது. வாழ்வின் நிகழ்ச்சி எதுவானாலும் ஆரம்பம், முடிவு இரண்டும் தேசியப் பண்ணுக்கு இடமளிப்பதாக இருக்க வேண்டும். விடுதலை உணர்வு வீறுபெற அது அவசியம். நமது கலைஞர்கள், மெல்லிசை மன்னர் சிறப்பாக நாதஸ்வர மேதைகள் இதனை அவதானிப்பார்களாக. சிறப்பாக தமிழ் நாட்டில் நிகழ்ச்சிகள் அளிக்கச் செல்லும் கலைஞர்கள் இங்கு மட்டும் அல்ல அங்கும் அப்படிச் செய்து முன் மாதிரி காட்டவேண்டும்.

தமிழ் ஈழத்தின் தேசியப் பண் வாத்திய இசையாக ஒலித் தட்டில் பதிவாக வேண்டும். அத் தட்டுக்கள் உலகின் எப்பாகத்திலுமுள்ள தமிழ் ஈழ மக்களுக்குக் கிடைக்கக் கூடியதாக இருக்கவேண்டும். பாடக் கூடியவர் யாவரும் தமிழ் ஈழத்தின் தேசியப் பண்ணைப் பாடத்தெரிந்து கொள்ள தமிழர் கூட்டணி செய்ய வேண்டிய முதற் காரியம் அது! தேசிய உணர்வு பிறந்துவிட்டால் அது பீறிட்டுப் பாய்வதை யாராலும் தடுக்கமுடியாது. இவரால் அவரால் வருவதல்லச் சுதந்திரம். மக்கள் நாடத் தலைப்படும் போது மட்டுமே கிட்டுவது அது. காலம் கனியும் போது வழி நடத்தத்தேவையான தலைவர்களைச் சந்தர்ப்பத்துக்கு ஏற்ப மக்களே உருவாக்கிக்கொள்வர்.

இங்கிலாந்தில் உள்ள தமிழ் ஈழ இளைஞர் தமிழ் மக்கள் பெறவேண்டிய விடுதலை உணர்வு இப்படித்தான் அமையவேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக இலக்கணமாகத் திகழ்கிறார்கள். படிக்க மட்டுமா வந்தோம்? பிழைக்கவா வந்தோம் என்ற கேள்விக்கு அவர்களது உதாரண வாழ்வே விடையாக அமையவில்லையா? வழி நடத்தத் தலைவர்கள் இல்லாத

## மனித உரிமை நாளன்று விடுதலைக்குரல்ஒலித்திடுவோம்!

போதும் அவர்களது பணி பயன் தராதுவிட்டதா? ஆயினும் கட்டுப்பாடுள்ள ஒரு அணியாக அவர்கள் தம்மை அமைத்துக்கொள்வார்களா[illegible]கில் இன்னும் அதிகமா[illegible] அவர்களால் சாதிக்க முடியும்.

உலகக் கிரிக்கெட் கிண்ணப் போட்டியின்போது அவர்கள் நிகழ்த்திய ஆர்ப்பாட்டம் டெலிவிஷனில், வானொலியில், உலகப் பத்திரிகைகளில் வானொலி நேர்முக வர்ணனையில், திரையில் தமிழ் ஈழப் பிரச்சினைக்கு நல்ல பிரச்சாரம் தேடித் தந்தது. உலகப் பத்திரிகைகள் முன்னிலும் அதிகமாக தமிழ் ஈழப் பிரச்சினையைத் தமது பத்திரிகைகளில் நிரப்புகின்றன. ‘தமிழர்—சிங்களவருக்கிடையே இணக்கம் ஏற்படவேண்டும்” என லண்டனில் அமைக்கப்பட்டிருக்கும் சிறுபான்மையினர் குழுவிற்காக வோல்டர் ஸ்வார்ஷ் என்னும் பத்திரிகையாளர் வெளியிட்டுள்ள அறிக்கை எடுத்தோதுகிறது. அனைத்துலக மாநாடுகளின் பேராளர்களுக்கும் லண்டன் வாழ் தமிழ் ஈழ இளைஞர் இப்போது மகஜர் சமர்ப்பிக்கத் தலைப்பட்டுள்ளனர்.

இக்காலகட்டத்தில் ஐ. ந. மனித உரிமைகள் சாதனத்தையும், மனித உரிமைகள் பிரகடனத்தையும் ஏன் மனித உரிமைகள் தினத்தையும் கூட லண்டன் வாழ் தமிழ் இளைஞர் மட்டுமல்ல எந்தத் தமிழரும் மறக்கப்படாது. அடிப்படை ஜனநாயக மனித உரிமைகள் பால் “மனித உரிமைகள் தினத்தன்று” எமது நாட்டம் திரும்பட்டும். மனித உரிமைகள் மீதான ஆணைக்குழுவும் ஒரு ஐ. நா. அமைப்பே. எமது மகஜர்கள் அங்கும் செல்லட்டும். இனவொதுக்கலுக்கும் இனரீதியிலான பாரபட்ச நடவடிக்கைகளுக்கும் எதிரான போராட்ட காலமாக 1973 — 1983 வரையுள்ள பத்து ஆண்டு காலத்தைத்—தசலாண்டாக மேற்படி ஆணைக்குழு பிரகடனப் படுத்தி இருப்பதால் அப்பத்து ஆண்டு கால வரையறைக்குள காரியத்தைச் சாதிக்க உறுதி பூணுவோம்.

மனித உரிமைகளை ஏற்று மதிப்பதாக உறுதியுரை எடுத்ததன் பேரில் ஐ. நா. உறுப்புரிமையைப் பெற்றிருக்கும் இலங்கை அரசும் அதன் ஒலிபரப்பு நிலையமும் காரணத்தோடுதான் மனித உரிமைகள் தினத்துக்கு முக்கியத்துவம் தராது இருக்கின்றன. மனித அடிப்படை ஜனநாயக உரிமைகளைத் தமிழ் மக்களுக்கு மறுத்துக் கொண்டு வேறு விதமாக அவை எப்படி இயங்க முடியும். இதனை உலகுக்கு அம்பலப்படுத்த “மனித உரிமைகள் தினத்தைக் கைக்கு எட்டிய சாதனமாகவே பயன் படுத்துவோம்—

—திரவியம்

## வாணி விழாவும் ‘காக்கா பிடிப்பும்’

அண்மையில் வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெற்ற கலைமகள் விழாவிற்கு சிறீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த வட்டுக்கோட்டை பா. உ. திரு. ஆ. தியாகராசா் விஷேட விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தது பற்றி இந்துக்கள் பலர் ஆத்திரம் அடைந்துள்ளனர்.

சுங்கத் திணைக்கள இந்து ஊழியர்களால் நடாத்தப்பெற்ற இவ்விழாவிற்கு இந்நாட்டு இந்து மக்களுக்கும் ஏனைய சிறுபான்மை மதங்களுக்குமாக போராடும எத்தனையோ தமிழ்த் தலைவர்கள் இருக்கக்கூடியதாக, தனிச் சிங்கள — பௌத்த அரசியலமைப்புக்கு கைதூக்கியவரான திரு. தியாகராசாவுக்கு இந்துக்கள் நடாத்தும் விழாவில் என்ன வேலையென அவர்கள் குமுறுகிறார்கள். எட்டப்பர்களுக்கு “காக்கா” பிடிக்கும் பலே பேர்வழி ஒருவரின் முயற்சியாலேயே கலைமகள் விழாவில் இப்படிப்பட்ட அசிங்கமான காரியம் நடைபெற்றுவிட்டதாக கூறப்படுகின்றது. இந்து ஊழியர்கள் பலர் இந்தக் “காக்கா” பிடிக்கும் செயலைக் கண்டித்துள்ளனர்.

## காசி ஆனந்தனுக்கு, உன் கைவேலைக் கொடு!

### முருகனிடம் ஓரன்பர் பிரார்த்தனை!

பெரிய கல்லாற்று சிவசுப்பிரமணியர் ஆலயத்தில் நாற்பது நாள் கும்பாபிஷேக திருவிழா நடந்தது. கடைசி நாள் 20ம் திகதியன்று அவ்வாலயத்தில் ஆலய நிர்வாகிகள் முன்னிலையில் ஏலத்தில் மாலை விற்கும் நிகழ்ச்சி ஒன்று நடந்தது. அப்போது சிறிலங்கா சுதந்திரக் கட்சிகிளை உறுப்பினர் ஒருவர் ஓடி வந்து இம்மாலையைதான் வாங்கி சிறையில் வாடும் காசி ஆனந்தனுக்கு ஒருவித ஆபத்தும் வராமல் காப்பாற்றப்பட அலங்கார முருகனுக்கு அம்மாலையை சாத்தவேண்டும்மென்று விடாப்பிடியாக நின்றார். மாலையின் விலையோ அதிகரித்துகொண்டு போய்விட்டது. கடைசி நேரத்தில் உணர்ச்சி வேகம் கொண்ட, சி. ல. சு., கட்சி கிளை உறுப்பினர் ஆகிய இராசநாயகம் ஜோர்ஜ் மாலைக்கு ஒரேயடியாக விலையேற்றிவிட்டார். அம்மாலையை வாங்க வேறு யாருக்கும் வல்லமை இல்லாமல் போய்விட்டது.

அந்த அன்பர் மாலையை வாங்கிக்கொண்டு முருகன் வீதிவலம் வருமிடத்துக்குச் சென்று ஒலி பெருக்கியில் “முருகா, சூரனைக்கொன்ற வேல் உன்னிடம் இருக்கிறது அவ்வேலை, காசி அண்ணுவின் கையில் கொடு; அவர் சிங்கள ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நின்று வென்று வரும் காட்சியை தமிழ் இனம் காணவேண்டும்; முருகா” என்று முழக்கமெழுப்பி பின் முருகனுக்கு மாலையை சாத்தினர். மாலை சாத்தப்பட்டவுடன் வாழ்க காசி அண்ணு எச்சட்டம் எதிர்த்தாலும் அச் சட்டத்தை உடைத்தெறியவேண்டும்; சிறையில் வாடும் செம்மல் காசியே நீ வாழ்க வாழ்க வாழ்க என்று கர கோஷம் எழுப்பினர்கள் அந்த அன்பரும் இளைஞர்களும்.



சுதந்திரன் வெளியீடு—6.

அமரர் ஆ. இராசரத்தினம் அவர்களின்

நினைவாக

அன்னார் எழுதிய

இலங்கைத் தமிழர் இன்னல் தீருமா?

என்னும் நூல் வெளிவந்துள்ளது.

விலை ரூபா 1-00

சுதந்திரன் வெளியீட்டகம்,

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12

### விற்பனையாளர்களுக்கு ஓர் அறிவித்தல்

சுதந்திரன், சுடர் விற்பனைக் கணக்குகளுக்குரிய பணத் தொகையை தனித் தனியாக அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

—நிர்வாகி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மலையகத்திலே........**

# சிறுபான்மை மதங்களின் சுதந்திரம் பறிக்கப்படுகிறது!

## இ. தொ. கழக செயலாளர் கண்டனம்!

"சிறுபான்மை இனத்தவரின் உரிமையை பறித்து வரும் பௌத்த அரசு தற்போது அவர்களுக்கு எஞ்சியிருக்கும் சிற்சில மத சலுகைகளிலும் கை வைக்க முனைந்துள்ளது. இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ மதத்தினரின் முக்கிய விடுமுறை தினங்களை ரத்துச் செய்ய முனைவதும் ஏனைய எந்த மதத்திற்தும் இல்லாத சலுகைகளையும், அந்தஸ்தும் பௌத்த மதத்திற்கு ஏற்கனவே வழங்கப்பட்டிருப்பதும் அரசின் சர்வாதிகார போக்கிற்கு எடுத்துக்காட்டாகும்."

இவ்வாறு இ. தொ. கழக பொதுச் செயலாளர், மு. பரராஜசிங்கம், சட்டத்தரணி, அவர்கள் சுதந்திரன் பத்திரிகைக்கு விடுத்த அறிக்கையொன்றில் கூறியுள்ளார். அவர் தொடர்ந்து அவ்வறிக்கையில் கூறியிருப்பதாவது.

நாங்கள் சோசலிசப் பாதையில் முன்னேறிக் கொண்டிருக்கின்றோம் என்று மேடைகளிலும், பத்திரிகைகளிலும், வானொலியிலும் பறைசாற்றிக்கொண்டிருக்கும் இவ்வரசு பெரும்பான்மை இனத்தவரின் பௌத்த மதத்திற்கு, வேறு எந்த மதத்திற்கும் இல்லாத சலுகைகளையும், உரிமைகளையும் வழங்கி, துவேச உணர்வுடன் நடந்துகொள்வதுதான் சோசலிசமா என்றும் கேட்டுள்ளார்.

இவ்வரசு எவ்வளவு சலுகைகளை பௌத்த மதத்திற்கு அளித்தாலும் அதை நாங்கள் எதிர்க்கவில்லை. மதம் அவரவரின் விருப்பத்திற்கிணங்க கடைப்பிடிக்கப்படுவது. அதை வளர்ப்பது அவர்களது கடமை. ஆனால் அதேநேரத்தில் ஏனைய மதங்களுக்கு ஏற்கனவே இருக்கும உரிமைகளையும், சலுகைகளையும் பறித்துத்தான் பௌத்த மதத்தை வளர்க்க வேண்டுமென்பதல்ல. அரசின் இச்செயல் சிறுபான்மை இனத்தவரின் மத, கலாசார சுதந்திரத்தை பூண்டோடு அழிப்பதற்கு அரசு திட்டமிட்டு செயல்படுவதற்கு ஒப்பாகும்.

இதே நேரத்தில் இந்துக்கள் அரசின் இந்நடவடிக்கைக்கு பலகோணங்களிலிருந்தும் தங்கள் எதிர்ப்புக்களை காட்டிக்கொண்டிருக்கும்பொழுது ஏனைய சிறுபான்மை இன மதத்தவர்கள் இதற்கு மௌனம் சாதித்துக்கொண்டிருப்பது, நமது இன்னும் பல உரிமைகளை நாம் அரசுக்கு விட்டுக்கொடுப்பதற்கு சம்மதிப்பதாகும் இவ்வாறான அரசின் தன்னிச்சைப் போக்கான, தொடர்ச்சியான நடவடிக்கைக்கு மேலும் இடம் கொடுக்காமல் இன, மத, பேதமின்றி ஒன்றுபட்டு இதற்கு எதிர்ப்புக் காட்ட வேண்டும்.

இல்லையாகில் எமது எஞ்சியிருக்கும் உரிமைகளும் பறிபோய்விடும் என்பதில் சந்தேகமில்லை. அதுமாத்திரமின்றி, ஏனைய மதத்தவர்களையும் பௌத்தர்களாக மாறும் வண்ணம் கூட அரசு கட்டாயப்படுத்தும் காலம் வெகு விரைவில்வந்துவிடும்; வேண்டுமானல் இதற்கு சாதகமாக சட்டத்தைகூட அவர்கள் ஏற்படுத்திக் கொள்வார்கள்.

●

## இ. தொ. கழக கூட்டம்

இலங்கை தொழிலாளர் கழகத்தின் உடபுசல்லாவ வாலிப / மாதர் முன்னணிக் கூட்டம் எதிர்வரும் 19ந் திகதி உடபுசல்லாவ மாவட்டபணிமனையில் நடைபெற இருக்கின்றது. இக்கூட்டத்தில் கழகத்தின் பொதுச்செயலாளர் சட்டத்தரணிதிரு. எம். பரராஜசிங்கம்கலந்துகொள்வார். இதற்கான ஏற்பாட்டை உடபுசல்லாவ மாவட்ட, வாலிப, மாதர் முன்னணி அமைப்பாளர் திரு. எஸ். செல்வராஜா மேற் கொண்டு வருகின்றார்.

●

## தொழிலாளர்களுக்கு சேவைகாலப்பணம்!

டெல்மார் குறூப்பைச் சேர்ந்த மாசா தோட்டத்தில் சில தொழிலாளர்களுக்கு அவர்களின் சேவைக் காலப் பணத்தை தோட்ட நிர்வாகம் நீண்ட காலமாக வழங்க மறுத்து வந்தது. இதனல் சம்பந்தப்பட்ட தொழிலாளர்கள் மிகவும் கஷ்டத்தை எதிர்நோக்கினர். தோட்ட நிர்வாகத்தின் இக்கெடுபிடியின் விளைவாக எழுந்த புகாரை அடுத்து உடபுசல்லாவ இ. தொ. கழக உதவி மாவட்டப்பிரதிநிதி திரு. டி. வி. கறுப்பையா நிர்வாகத்திற்கு எதிராக வழக்குத் தொடர்ந்து இப்பணத்தைப் பெறுவதற்கு வழிசெய்துள்ளார். இவ்வழக்கில் இ. தொ. கழகத்தின் சார்பாக, கழகப் பொதுச் செயலாளர் மு. பரராஜசிங்கம், சட்டத்தரணி, அவர்கள், வாதாடினர். வழக்கை விசாரித்த நீதவான் ஜே. டபிள்யூ. சிறிமானே அவர்கள் சம்பந்தப்பட்ட தொழிலாளர்களான மாரியாயி, லெட்சுமி, உக்கு பண்டா, செங்கம்மா, சந்தனம், கறுப்பண்ணன், பொட்டு, பிடாரன், முத்து மெணிக்கா ஆகியோருக்கு மொத்தம் 6375 ரூபாயை கொடுக்கும்படி தோட்ட நிர்வாகத்திற்கு கட்டளையிட்டுள்ளார்.

வோல்டிமார் குறூப்பைச் சேர்ந்த, கோமாளி டிவிசனில் உள்ள திரு. டி. ராமையா என்னும் தொழிலாளி தோட்டத்தை விட்டு வேறு இடத்திற்கு குடிபெயர்ந்து செல்வதின் காரணமாக தனது சேவையிலிருந்து தானகவே நீங்கிக்கொண்டார். இதைச் சாட்டாக வைத்து, இவர் வேலையிலிருந்து ஓய்வு பெறும் வயதை அடையும் முன்னரே தானக நீங்கிக் கொண்டார் என தோட்ட நிர்வாகம் அவருக்குரிய சேவைக் காலப்பணத்தை வழங்க மறுத்து வந்தது. இது தொடர்பாக உடபுசல்லாவ இ. தொ. கழக உதவி மாவட்டப் பிரதிநிதி, திரு. டி. வி. கறுப்பையா அவர்கள்சம்பந்தப்பட்டதோட்ட நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டும் வழங்கமறுத்து விட்டது. இதையடுத்து தோட்ட நிர்வாகத்திற்கு எதிராகவழக்குத்தொடரப்பட்டது.

இவ்வழக்கில் தொழிலாளி சார்பில் வாதாடிய இ. தொ. கழக பொதுச்செயலாளர் சட்டத்தரணி திரு. மு. பரராஜசிங்கம் அவர்கள் தனது சொந்த விருப்பத்தின்படி சேவையிலிருந்து ஒரு தொழிலாளி நீங்கியிருந்தாலும் அவரின் சேவைக் காலத்திற்குரிய நன்கொடைப் பணம் வழங்கப் படவேண்டுமென வற்புறுத்தினர். வழக்கை விசாரித்த நீதவான் முடிவில் சம்பந்தப்பட்ட தொழிலாளிக்கு 18 வருடகால சேவைக்குரிய பணமாக ரூபா 437.50யும், செலவுத்தொகையாக ரூபா 31.50யும் உடனடியாக செலுத்துமாறு தோட்ட நிர்வாகத்திற்கு உத்தரவிட்டுள்ளார்.

# இஸ்லாமியத் தமிழரும் இன்பத் தமிழ் ஈழமும்!

1956ம் ஆண்டு ஆனி ஐந்தாம் நாள் அது, தனிச் சிங்களச் சட்டத்தின் மூலம் தம் ஏகாதிபத்திய வெறித்தனத்தை எடுத்துக்காட்டி, இலங்கையின் இரண்டாவது பெரும் தேசிய இனமான தமிழ் பேசும் மக்களுக்குச் சிங்கள ஆட்சியாளர்களால் அடிமை முத்திரை குத்தப் படுவதற்கு முன்பு, இந்நாட்டையே வழி வழித்தாயகமாகக்கொண்ட ஆறு லட்சம் இஸ்லாமிய பெருங்குடி மக்களும் (அன்றைய கணக்கு) இணைந்து பிணைந்து வாழ்ந்து வந்தார்கள். மட்டக்களப்பிலே வாழும் ஒரு இஸ்லாமியனுக்குத் தேள் கடித்தால் மன்னாரிலே வாழும் ஒரு இஸ்லாமியனுக்கு நெறி கட்டவேண்டும் — காலியிலே வாழும் ஒரு இஸ்லாமியனுக்கு விஷம் தீண்டினல் கண்டியிலே வாழும் ஒரு இஸ்லாமியனுக்கு விஷ வைத்தியம் செய்யவேண்டும் என்ற நிலையில் ஒற்றுமைக்கு எடுத்துக் காட்டாக அன்றைய இஸ்லாமிய சமுதாயமிருந்தது.

ஆனல், அன்று கொண்டு வரப்பட்ட தனிச்சிங்களச் சட்டத்திற்குப்பின் ஏக தெய்வக்கொள்கையில் ஏற்றம் கண்ட இஸ்லாமிய மக்களிடையே கருத்து வேற்றுமைகள் ஏற்பட்டு, வடக்கு கிழக்கு மாகாணங்களிலே வாழும் முஸ்லிம்களைத்தென்னிலங்கையிலே வாழும் முஸ்லிம்களுக்கு மொழிக்கொள்கையில் பிடிப்பதில்லை. அதே போன்று தென்னிலங்கையிலே சிங்கள மக்களுடன் அரசியல் இலாபத்திற்காக இணைந்து நிற்கும் முஸ்லிம்களுக்குத் தமிழீழத்தில் தமிழோடு தமிழரசு ஒன்றித்து மேம்பட்ட வாழ்க்கை நெறி கண்ட முஸ்லிம்களை அரசியல் பாதையிலே பிடிப்பதில்லை என்ற நிலை ஏற்பட்டிருக்கின்றது. எனவே பௌத்த சிங்கள ஏகாதிபத்திய வாதிகளால் அன்று கொண்டுவரப்பட்ட சிங்களம் மட்டும் என்ற இச்சட்டத்தால் இன்று பத்து லட்சம் இஸ்லாமிய மக்களும் அரசியலில் தாக்குண்டவர்களாக மட்டுமல்லாது — பிளவுபட்ட ஒரு இனமாகவும் வாழ வேண்டிய நிர்க்கதிக்குட்பட்டிருப்பதை நாம் விரும்பாமலே ஏற்றுக்கொண்டேதானகவேண்டும்.

### மொழியே அரண்

உடலுக்கும் உள்வத்திற்கும் இத மூட்டும் நீரோடை என்ற தப்புக்கணக்கில் சிலர் சிங்களக் காட்டாற்றில் நீந்தி விளையாடிக்கொண்டிருப்பதால் அதன் இறுதி முடிவு விபரீதமாகத்தானிருக்கும் என்பதை உணரத் தவறி விட்டார்கள். கட்டுடைத்து வெறிகொண்டு, புயல் வேகத்தில் பொங்கி நிற்கும் சிங்கள ஏகாதிபத்திய அடிமைச் சகதிக்குள் தம்மையும்—தம்மை நம்பிய அப்பாவி மக்களையும் அமுக்கிவிட்டு — இவர்கள் இன மதம் பேசிக்கொண்டிருக்கின்றார்கள்.

எந்தக்கட்டுப்பாடுகளுமே இல்லாது தன்னிச்சையாக ஒரு மொழி வாழ்ந்தால் தான் அம்மொழிக்குரிய இனமும் உலகில், தன்னலனுக்கு மட்டுமல்லாது, உலக நலனையும் பாதுகாத்து வாழ முடியும். ஆனல் அம்மொழி அழிந்தால் அல்லது அழிக்கப்பட்டால் அதற்குரிய இனமும் தானகவே கால வெள்ளத்தால் அழிந்துவிடும் என்பதே உலகப் பெரும் மொழி விற்பன்னர்

**கே.எஸ்.ஏ. கபூர்**

களின் ஒரு முகமான தீர்ப்பாகும். உதாரணமாக 1917ம் ஆண்டு ரஷ்யப் புரட்சிவெற்றி காண்பதற்கு முன்பு அங்கே வாழ்ந்த சிறுபான்மை தேசிய இனங்களெல்லாம் அடக்கி ஒடுக்கப் பட்டிருந்தனர். அப்போது அங்கு நடந்த புரட்சியில் மகத்தான வெற்றி கண்ட லெனின், அத்தேசிய இனங்களுக்கு விடுதலை வழங்கிய போது சில தேசிய இனங்களின் மொழிகளுக்கு எழுத்துவடிவோ— இலக்கிய வளமோ — வரலாற்றுப் பெருமைகளோ கிடையாது. இருந்தாலும் பேச்சு, மொழிகளை மட்டும் கொண்ட அத்தேசிய இனங்கள் அரசியல் விடுதலை பெற்ற பின் இன்று உலகில் பீடுநடை போட்டு வாழ்வதை நாம் பார்க்கின்றோம்.

ஏன் — 3000 மக்களைக் கொண்ட 'நைட்னி' இன மக்களின் மொழிகூட தேசிய மொழியாக ரஷ்யாவில் ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கின்றது.

இங்கே தம்மைத் தலைவர்கள் என்று சொல்லிக்கொள்ளும் சிலர் தமக்குக் கிடைத்திருக்கும் அற்ப சொற்ப சலுகைகளுக்காக பத்து இலட்சம் முஸ்லிம்களையே வாழ வைத்துப் புகழீட்டித் தந்துகொண்டிருக்கும் தமிழ் மொழியின் தனிச்சிறப்பைக் குருட்டுத்தனமாககுறைத்து மதிப்பிட்டுக்கொண்டதோடு—செழித்து வளர்ந்திருந்த இஸ்லாமிய சமுதாயத்திற்குள் தனிச்சிங்களச் செவ்வாழைக் குரங்குகளையும் கட்டுக்காவலின்றி நுழையவிட்டு ஆபத்துக்களை உணராது வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கின்றார்கள்.

### சமத்துவம் தந்த தமிழ்

தமிழகத்தையும் — தமிழையும் நம்பி அடைக்கலம் தேடி வந்த பல மதங்களுக்கும் — மக்களுக்கும் வாழ்வு தந்து நல்ல பாதுகாப்புத் தந்த தமிழ், தமிழ் மண்ணிலே அம் மதங்களையும்— மக்களையும் சமத்துவமாக வளர்த்துவிட்டுப் பெருமை கண்டிருக்கின்றது. 'தேம்பாவாணி' மூலம் கிறிஸ்துவத்தைவளர்த்த தமிழ், மணிமேகலைமூலம்பௌத்தமதத்தை வளர்த்த தமிழ், சீறு மூலம் இஸ்லாத்தை வளர்ப்பதிலும் சிறப்புக்கண்டது. அராபிய மொழியிலேயே எமது மதக்கோட்பாடுகள் இருந்தபோதிலும்தேனெழுகும் தமிழிலேதான் அக்கருத்துக்களை எங்களால் கற்றுத் தெளிந்து கொள்ள முடிகின்றது.

இந் நிலையில்தான் நிலையில்லாத முஸ்லிம் அரசியல் தலைவர்களில் பலர் தம்மை நம்பி நிற்கும் மக்களின் ஆபத்துக்களையும் — எதிர்கால அரசியல் நிலைகளையும் அரசியல் மதியூகத்துடன் உணராது, அராபிய நாட்டு முஸ்லிம்களுடன் தம்மை இணைத்துக் காண விழைந்துகொண்டிருக்கின்றார்கள். கிணற்று நீரில் வளர்க்கப்பட்ட மரத்திற்கு மழை நீர் உதவாது என்றே அறிவுக்குப்பொருத்த மற்றதனமாக விவாதித்துக் கொண்டிருக்கின்றார்கள். இலங்கை முஸ்லிம்கள் அராபிய இனத்தைச் சார்ந்தவர்களாம். அவர்களுக்குத் தாய் மொழியாக தமிழ் அமையாதாம். ஐயகோ கொடுமை, கொடுமை.

இலங்கை வாழ் இஸ்லாமிய மக்களின் தாய்மொழி அழகு தமிழேதான் என்ற தத்துவத்தை எந்தமொழி வல்லுனர்களாலுமேமறுக்க முடியாது. ஒரு குழந்தையைப்பெற்றெடுத்த தாய் எந்த மொழியால் அக் குழந்தையைத் தாலாட்டிச் சீராட்டிப் பாலூட்டுகின்றளோ — எந்த யொழியால் அக்குழந்தையை அழைத்து அணைக்கின்றளோ அதுவே அக்குழந்தைக்குத் தாய் மொழியாகி விடுகின்றது என்றே உலகப்பெரும் அறிஞர்களெல்லாம் ஒப்புக் கொண்டிருக்கும்போது, இலங்கை முஸ்லிம்கள் மட்டும் அதற்கு விதி விலக்காகி விடமுடியுமா? அதே போன்று எமது தாய் எப்படியெல்லாம் தெய்வ உருவில் எமக்குக் காட்சியளிக்கின்றளோ, அதுபோன்றேதான் எம் தாய் உலகோடு எம்மை இணைக்கக் கற்றுத்தந்த மொழியும் தெய்வக்கருவியாக மொழி உருவில் அமைந்திருக்கின்றது. இந்த மேலான தத்துவத்தைச் சந்தர்பங்களுக்கேற்ப மறுப்பவர்கள் தம் தாய்ப் பாச உணர்வையே தீயிட்டுப் பொசுக்கியவர்கள் என்றுதான் துணிந்து சொல்கின்றேன்.

—வளரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகத்துவாரத் தமிழ்க் கத்தோலிக்கருக்கு

# மற்றுமொரு மரண அடி!

## தமிழ்ப் பாடசாலையை மூடிவிடச் சூழ்ச்சி?

'கடந்த பெப்பிரவரி மாத முதல் முகத்துவாரத்தில் உள்ள புனித அந்திரேயார் தேவாலயத்தில் தமிழ்மொழி பூசை வைப்பது மறுக்கப்பட்டிருப்பதும் இது காரணமாக எழுநத சிக்கலான பிரச்சினைகளும் இதனைச் சுமுகமாகத் தீர்க்க கொழும்பு — தமிழ்க் கத்தோலிக்கர் கழகம் எடுத்து வரும் நடவடிக்கைகளும் வாசகர் அறிந்ததே! இப்பிரச்சினையால் எழுந்த மனவேதனை மாறுவதற்குள்— புனித அந்திரேயார் ஆலயத்திலுள்ள தமிழ்ப் பாடசாலையின் மேல் வகுப்புகளை அடுத்த வருட ஆரம்பமுதல் மூடிவிடுதற்கான நடவடிக்கைகளும் மறைமுகமாய் மேற்கொள்ளப்பட்டு வருவதாகச்சொல்லப்படுவது முகத்துவாரத் தமிழ்க் கத்தோலிக்கருக்கு விழுந்த மற்றொரு மரண அடியாகும்'' என்று வடகொழும்பு கத்தோகலிகப் பிரமுகர் ஒருவர் அபிப்பிராயம் தெரிவித்தார்.

கடந்தவாரத்தில் இதுசம்பந்தமாய் உருவாகிய இப்பிரச்சினை தீவிரமாய் வளர்ந்து விசுவரூபமெடுத்துள்ளது. இப்பிரச்சினை சம்சந்தமாய் சமீபத்தில் கூடிய கொழும்புத் தமிழ்க் கத்தோலிக்கர் கழகப்பொதுக் கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டு, இந்தச் சூழ்ச்சிகரமான நடவடிக்கை உடனடியாக நிறுத்தப்படவேண்டுமென்றும், இதற்கான அவசிய தீவிர நடவடிக்கைகளைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு கழக நிர்வாகம் எடுக்க வேண்டுமென்றும் சென்ற— சனிக்கிழமை கூடிய கழகப் பொதுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

திட்டமிட்டு நடைபெற்று வரும் இந்தக் கழுத்தறுப்பு வேலைகளை ஆதரித்து வரும் ஒரு சில இமிட்டேஷன் கத்தோலிக்கரின் நடவடிக்கை கூட்டத்தில் பலமாகக் கண்டிக்கப்பட்டது. பெரும்பான்மைக் கத்தோலிக்கரான அப்பகுதியிலுள்ள ஒரு சிலருக்கு அங்குள்ள சிலவாலறுந்த கததோலிக்கத் தமிழர் மறைமுகமாகக் காட்டி வரும் ஆதரவு குறித்தும், கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

இத்தகையோர் மட்டிலும் [illegible]ழகம் கவனம் செலுத்தி [illegible]துரிய நடவடிக்கைகள் [illegible]லம் அவர்கள் கொட்[illegible]த்தை அடக்கவேண்டுமென்றும் இத்தகைய எட்டப்பர்களே இனத்தைக் காட்டிக்கொடுத்து வயிறு வளர்க்கும் ஈனப்பிறவிகள் என்றும், சுட்டிக்காட்டப்பட்டது இத்தகைய சமூகத் துரோகிகள் மட்டில் விழிப்பாய் இருந்து சேவைசெய்[illegible]வர்களுக்குப் பக்கபலமாய்க் கழகம் செயலாற்ற வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. கழகச்செயற்குழு இதற்கான தீவிர முயற்சியில் இறங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ் கத்தோலிக்கர்களின் உரிமைப் பிரச்சினையில் சுதந்திரன் அளித்து வரும் ஒத்துழைப்புக்கும் இக்கூட்டத்தில் நன்றி தெரிவிக்கப்பட்டது.


பிளாஸா 3வது வாரம்!

★ கணேஷ், ★ பரிஞலே, ★ லிஞ

-நடித்த-

**புதிய காற்று**

டைரக்‌ஷன்: எஸ். ராமநாதன். தயாரிப்பு: வி. பி. கணேசன் ஜே. பி.

8வது ஜனத்திரள் வாரம் கிங்ஸ்லி

ரவிச்சந்திரன், ஜெய்சங்கர், சாவித்திரி, லட்சுமி, ஜெயசித்திரா, நாகேஷ், நடித்த—

**அக்கரை பச்சை**

விரைவில்:- தீர்க்க சுமங்கலி

11-வது வாரம் கெப்பிட்டல்

● பக்திக்கும் சக்திக்கும் இடையில் நிகழும் பலப்பரீட்சை

சிவகுமார், சுந்தரராஜன், நாகேஷ், ஸ்ரீகாந்த சசிகுமார், ஜெயசித்ரா, ஜெயசுதா நடித்த—

தேவரின்

**வெள்ளிக்கிழமை விரதம்**

(ஈஸ்ட்மென் கலர்)

10வது வாரம்

லிடோ (யாழ்நகர்)

சிவாஜி - ஜெயலலிதா நடித்த

**தாய்**

3வது வாரம்!

செல்லமகால்

★ கணேஷ்,

★ பரிஞலே,

ஆகியோர் நடித்த—

**புதிய காற்று**

டைரக்‌ஷன: எஸ். ராமநாதன். தயாரிப்பு: வி. பி. கணேசன் ஜே. பி.

2 வது வாரம்

ரீகல் (மட்டுநகர்)

கண்ணுல் காண்பதும்பொய்! காதால் கேட்பதும் பொய்! தீர விசாரித்தறிவதே மெய்! அவன் தான் கண்டதையும் கேட்டதையும் வைத்து நாகதம்பிரான்தான் தனதுதாயின் உயிரைப் போக்கியதாக நினைத்தான் ஆனல் கடைசியில் உண்மையை அறிந்த போது!... விளக்க வருகிறது:

**வெள்ளிக்கிழமை விரதம்**

ஏப்பயர் — 10-வது வாரம்

சஷிகபூர் — மும்தாஸ் நடித்த

சோர் மச்சாயே சோர்

(ஈஸ்ட்மென் கலர்)

3வது வாரம் காட்சியளிக்கிறது

கெயிட்டி

எம்.ஜி.ஆர் — டி. ஆர். ராஜகுமாரி -நடித்த-

**குலேபகாவலி**

ரீகல் (நுவரெலியா) 4-வது வாரம்

தினசரி 2.30, 6, 9, ஞாயிறு 10.30, 2.30, 6, 9

எம்.ஜி.ஆர். கே.ஆர்.விஜயா நடித்த

**நல்ல நேரம்**

(கலர்)

4-வது வாரம்

நெல்சன் (திருமலை)

தினசரி 6, 9.30, சனி—ஞாயிறு 2.30, 6, 9.30

**கோமாதா என் குலமாதா**

(கலர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை இலான் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு-12 பண்டாரநாயகா வீதி, 194 ல் அச்சகத்தில் 1975-ம் வருடம் ஒக்டோபர் மாதம் 19-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.